திருவகுப்புகள்

திருவகுப்புகள்

1	சீர்பாத வகுப்பு	1
2	தேவேந்திர சங்க வகுப்பு	7
3	வேல் வகுப்பு	11
4	திருவேளைக்காரன் வகுப்பு	14
5	பெருத்த வசன வகுப்பு	19
6	வேடிச்சி காவலன் வகுப்பு	23
7	சேவகன் வகுப்பு	28
8	புய வகுப்பு	29
9	கடைக்கணியல் வகுப்பு	37
10	மயில் வகுப்பு	40
11	வீரவாள் வகுப்பு	42
12	திருப்பழநி வகுப்பு	44

சீர்பாத வகுப்பு

உததி இடை கடவு(ம்) மரகத அருண குல துரக
உப லளித கனக ரத சதகோடி சூரியர்கள்

உதயம் என, அதிக வித, கலப கக மயிலின் மிசை
யுக முடிவின் இருள் அகல ஒரு சோதி வீசுவதும்

உடலும், உடல் உயிரும், நிலைபெறுதல், பொருள் என, உலகம்
ஒருவி, வரும் மநு பவன சிவயோக சாதனையில்

ஒழுகும் அவர், பிறிது பரவசம் அழிய, விழி செருகி.
உணர்வு விழி கொடு, நியதி தமதூடு நாடுவதும்

உரு எனவும் அரு எனவும் உளது எனவும் இலது எனவும்
உழலுவன பர சமய கலை ஆரவாரம் அற

சீர்பாத வகுப்பு

கடலினிடத்தே (கடவும்) செலுத்தப் படுகின்ற, (மரகத) பச்சை (அருண) செந்நிறம் முதலிய ஏழு வகையான நிறங்களை உடைய (குல) சிரேஷ்டமான குதிரைகள் பூட்டப்பட்ட (உப லளித) ஒளிரும் அழகுடன் கூடியதான, பொன்னொளி வீசும் தேர் மீது வரும். பல கோடிக் கணக்கான சூரியர்களின்

உதயமாகும் ஒளியோ இது என்று கூறும்படி. பல நிற வகைகளைக் கொண்ட. (கலபம்) தோகைகளை உடைய, மயில் என்னும் (கக) பறவை மேல் விளங்கி. யுக முடிவில் ஏற்படும் பேரிருள் விலகி நீங்க (ஒரு) ஒப்பற்ற ஜோதி ஒளியை வீசுவதும் (முருகவேளின் மண நாறு சீறடியே)

உடலும். அந்த உடலினுள்ள உயிரும், அழியாது நிலைத்திருத்தலே (பொருள்) மோக்ஷமாம் என்று கருதி, (உலகம் ஒருவி) உலகப் பற்றை அடியோடு நீக்கி, (வரும்) அந்த பக்குவ நிலையில் தோன்றும். (மநு) தரும சாஸ்திரம்/ மந்திரங்களுக்கு (பவன) இருப்பிடமான சிவயோக பயிற்சியில்

நின்று ஒழுகும் சிவயோகிகள். (பிறிது பரவசம்) வேறு பராக்குகளின் (வசம்) பிடிப்பு அழிய, கண்கள் உட்புறம் சொருகி நிற்க. (உணர்வு விழி) ஞானக்கொண் கொண்டு (நியதி) யோக சாஸ்திர நியதிப் படி தங்களுள்ளே நாடி நிற்பதும் (மண நாறு சீறடியே)

(இறைவன்) உரு உடையதென்றும். உருவம் இல்லாதது என்றும். உள்ளது என்றும். இல்லாதது என்றும். உழல்கின்ற (பேசித் திரிகின்ற பிற சமயங்களின், தர்க்கக் கூச்சல்- ஆடம்பரப் பேரொலி அடங்கி ஒழிய

உரை அவிழ . உணர்வு அவிழ . உளம் அவிழ . உயிர் அவிழ
உள படியை உணரும் அவர் அநுபூதி ஆனதுவும்

உறவு முறை மனைவி மகவு எனும் அலையில் : எனது இதய
உருவுடைய மலின பவ சலராசி ஏறவிடும்

உறுபுணையும் , அறிமுகமும் . உயர் அமரர் மணி முடியின்
உறைவதுவும், உலைவிலதும் அடியேன் மனதுறைதலும்

இதழி, வெகுமுக ககன நதி. அறுகு, தறுகண் அரவு
இமகிரண. தருண. உடுபதி சேர் சடா மவுலி

இறை மகிழ, உடை மணியொடு அணி, சகல மணி, கலென
இமைய மயில் தழுவும் ஒரு திருமார்பில் ஆடுவதும்

(2)

பேச்சு அற்று நீங்க (மௌனநிலை உற), புலன்கள் செயல் ஒழிய , எண்ணங்களுக்கு இருப்பிடமான உள்ளம் ஒடுங்கி அதன் செயல் நீங்க. உயிரின் ஆணவ நிலையும் ஒடுங்கி நிற்க. (உள படியை) என்றும் அழியாது திகழும் மெய்ப்பொருளை. அறிகின்ற சிவயோகிகளின் (அநுபூதி) அநுபவ ஞானமாய் விளங்கி நிற்பதும் (மண நாறு சீறடியே)

உறவுமுறை மனைவி மக்கள் என்று அலைகள் வீசுகின்ற. எனது உள்ளத்தைப் போன்ற . சொரூபம் உள்ள (மலின) பாவங்கள் நிறைந்த (பவ சல ராசி) பிறவிக்கடலில் இருந்து , கரையேற்றும் திடமான தெப்பமும் , (அறிமுகமும்) ஞானத்தை அறிவிக்கின்ற வாயிலும் , சிறந்த தேவர்களின் மணி முடியில் விளங்குவதும் (சீறடியே) (உலைவிலதும்) அழிவில்லாததும் . அடியவனாகிய என் மனதுக்கு உகந்ததும் - இலக்காக இருப்பதும் - (சீறடியே)

(இதழி) கொன்றையும் . அளவற்ற கிளைகளையுடைய ஆகாச கங்கையும் அறுகம் புல்லையும் , அச்சமையும் வீரமும் கொண்ட பாம்பையும், (இம கிரண) பனி போற் குளிர்ந்த கிரணங்களை உடையதும் (தருண) இளமை வாய்ந்ததும் (மூன்றாம் பிறை) உடுபதி - நக்ஷத்திரங்களுக்குத் தலைவனை சந்திரனையும் (சேர்) ஒன்று கூடி விளங்குகின்ற சடைமுடியை உடைய சிவபெருமான் மகிழ . அரை மணியுடன் அணிந்துள்ள (சகல மணி) தண்டை . வெண்டையம் . கிண்கிணி . சதங்கை ஆகிய எல்லா ஆபரணங்களும் . கலகலென்று ஒலி செய்ய , இமயத்து வந்த மயில் அன்ன பார்வதி தேவி தழுவிக் களிக்கின்ற. ஒப்புற்ற அழகிய மார்பிலே விளையாடுவதும் (மணநாறு சீறடியே)

இமையவர்கள் நகரில், இறை குடி புகுத. நிருதர் வயிறு
எரி புகுத, உரகர் பதி அபிஷேகம் ஆயிரமும்

எழு பிலமும் நெறு நெறென முறிய, வட குவடு இடிய,
இளைய தளர் நடை பழகி விளையாடல் கூருவதும்

இனிய கனி கடலை பயறு ஒடியல் பொரி அமுது செயும்
இலகு, பெரு, கட, விகட தட, பார மேருவுடன்

இகலி, முது திகிரி கிரி நெரிய, வளை கடல் கதற,
எழு புவியை ஒரு நொடியில் வலமாக ஓடுவதும்

எறுழி. புலி. கரடி. அரி. கரி, கடமை, வருடை, உழை
இரலை மரை இரவு பகல் இரை தேர் கடாடவியில்

எயினர் இடும் இதண் அதனில், இளகு தினை கிளி கடிய
இனிது பயில் சிறுமி வளர் புன மீது உலாவுவதும்

முதல வினை முடிவில், இரு பிறை எயிறு, கயிறு கொடு
முது வடவை விழி சுழல வரு காலதூதர் கெட

(3)

இமையவர்கள் நகராகிய பொன்னுலகில் (இறை) அந்நகர்க்குத்
தலைவனை இந்திரன் மீண்டும் குடியேற. அசுரர்களின் வயிற்றில்
(எரி) நெருப்பு புகவும். (உரகர் பதி) பாம்புகளுக்குத் தலைவனாகிய
ஆதிசேடனது (அபிஷேகம்) முடிகள் ஆயிரமும்
பாதலம் முதலிய கீழுலகங்கள் ஏழும். நெறு நெறு என்று முறிபட,
வடக்கிலுள்ள மேரு மலை இடிந்து பொடிபட, இளம் பருவத்து
தளர்ந்த நடையைப் பயின்று திருவிளையாடல் செய்வதும் (சிறடியே)
இனிய பழங்களையும். கடலை, பயறு (ஒடியல்) பனங்கிழங்குப் பிளவு
கள். பொரி இவைகளை அமுதாக உட்கொள்ளும். (இலகு) விளங்கும்
நிரம்பப் பெருகும் (கட) மத நீர் கொண்ட. (விகட) விசித்திரமான. அழகான
(தட) பெரிய. கனத்த. மலை போன்ற கணபதியுடன்
(இகலி) பகைமை கொண்டது போல் நடித்து. பழைய சக்ரவாளகிரி
நெரியவும். (உலகை வளைந்துள்ள கடல் கூச்சலிடவும். ஏழுலகங்
களையும் ஒரு நொடியில் வலமாக ஓடி வந்ததும் (சிறடியே)
காட்டுப் பன்றி. புலி. கரடி. சிங்கம். (கரி) யானை. (கடமை) காட்டுப்பசு.
(வருடை) மலை ஆடு. (உழை) மான். (இரலை) கலை மான். (மரை) மான் வகை
இரவும் பகலும் இரை தேடும் பெருங் காட்டில்
வேடர்கள் கட்டியுள்ள (இதண்) பரண் மீதிலே (இருந்து) இளகு =
தழைத்துள்ள தினைக்கதிர்களை உண்ண வரும் கிளிகளைக்
(கடிய) வெருட்டி ஓட்ட நன்றாகப் பயின்றுள்ள சிறுமி வள்ளி
பிராட்டி வாழ்ந்திருந்த, தினைப்புனமீது உலாவுவதும் (சிறடியே)
(பிறப்பின்) முதற் காரணமான வினை முடிந்து உயிர் பிரியும் காலத்தில்,
இரண்டு பிறைச் சந்திரன் போன்ற (எயிறு) பற்களும், பாசக் கயிறும் கொண்டு
பழைய வட வாமுகாக்கினி போன்ற கண்கள் சுழல வரும் யமதூதர்கள் தோற்று
ஓடும்படி

முடுகுவதும், அருள் நெறியில் உதவுவதும், நினையும் அவை
முடிய வருவதும், அடியர் பகை கோடி சாடுவதும்

மொகு மொகென மதுப முரல் குரவு, விளவினது
குறுமுறிய, மலர், வகுள, தள முகுநீல தீவரமும்

முருகு கமழ்வதும், அகில முதன்மை தருவதும், விரத
முநிவர் கருத (அ)ரிய தவம் முயல்வார் தபோபலமும்

முருக, சரவண, மகளிர் அறுவர் முலைநுகரும் அறு
முக, குமர சரணமென அருள் பாடி ஆடி மிக

மொழி குழற அழுது தொழுது உருகும் அவர் விழி அருவி
முழுகுவதும், வருக என அறை கூவி ஆளுவதும்

வெருட்டி ஓட்டுவதும் (சீறடியே). உயிர்கள் ஆன்மிக வழியில் செல்வதற்கு உதவி புரிவதும் (சீறடியே), நினைத்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறும்படி வந்து உதவுவதும் (சீறடியே). அடியார்களின் கோடிக் கணக்கான இடையூறுகளை அடித்து ஓட்டுவதும் (மண நாறு சீறடியே)

மொகு மொகு என்று (மதுபம்) வண்டுகள் (முரல்) ரீங்காரம் செய்யும் (குரவு) குராமலர், விளாமரத்தின் (குறு முறிய) இளந் தளிர்கள், மலர்களுள் (வகுளம்) மகிழம்பூ. (தள) தளவு-முல்லை மலர், முகு நீல நிறமுள்ள (தீவரம்) குவளை மலர் ஆகிய மலர்கள்

நறுமணம் வீசுவதும் (சீறடியே) எல்லாவற்றுள்ளும் முதன்மை ஸ்தானத்தை வழங்க வல்லதும் (சீறடியே). நியம விரதங்களை அனுஷ்டிக்கும் முநிவர்களாலும் எண்ணுதற்கு அரிதான தவ நிலையை முயன்று செய்பவர்களுடைய தவத்தின் பயனை விளங்குவதும் (மண நாறு சீறடியே)

முருக! சரவண! கார்த்திகை மாதர்கள் அறுவர் முலை நுகரும் அறுமுகா! குமரா! சரணம் எனத் துதித்து அவருடைய திருவருளைப் பாடியும், ஆடியும், மிகவும்

சொற்கள் பெரிதும் குழற, உள்ளம் நெக்குருகி அழுது, கை குவித்து தொழுது, உள்ளம், உடல், ஆவி மூன்றும் உருகி நிற்கும் அடியார்களது ஆனந்தக் கண்ணீராகிய அருவியில் மூழ்குவதும் (மண நாறு சீறடியே) அவ்வடியார்களை வருக வருக என்று வலிய அழைத்து ஆட்கொள்வதும் (மண நாறு சீறடியே)

முடிய வழி வழி அடிமை எனும் உரிமை அடிமை, (முழுது)
உலகறிய மழலை மொழி கொடு பாடும் ஆசுகவி

முதல மொழிவன, நிபுண, மதுப முகர், இத, மவுன
முகுள, பரிமள நிகில கவிமாலை சூடுவதும்

மத சிகரி கதறி, முது முதலை கவர்தர, நெடிய
மடு நடுவில் வெருவி, ஒரு விசை ஆதிமூலம் என

வரு கருணை வரதன், இகல் இரணியனை நுதி உகிரின்
வகிரும் அடல் அரி, வடிவு குறளாகி மாபலியை

வலிய சிறையிட, வெளியின் முகடு கிழிபட, முடிய
வளரு முகில், நிருதன் இருபது வாகு ஆதரமும்

மகுடம் ஒருபதும் முறிய அடு பகழி விடு குரிசில்
மருகன், நிசிசரர் தளமும் வரு தாரகாசுரனும்

(அடிமை) அடிமையாகிய நான் (முடிய) முற்றிலும் - பிறவிகள் தோறும் (வழி வழி) பரம்பரை பரம்பரையாக உனக்கு அடிமை என்கின்ற உரிமை பாத்தியதையை, உலகத்தார் யாவரும் தெரிந்து கொள்ளும்படியாக, மழலை மொழி கொண்டு பாடும் ஆசு கவியாக சொல்லப்பட்ட பாக்களை,

"முத்தைத்தரு" என்னும் பதிகத்தை முதலாகக் கொண்டு, (மொழிவன) மொழிந்தனவான, (நிபுண) திறம் வாய்ந்த, (மதுபம்) (முனிவர்களாகிய) வண்டுகளால் முகர்ந்து அனுபவிக்கப்பட்ட, (இதம்) இனிமை வாய்ந்த (மவுன முகுள) மௌன நிலையை விட்டு வாய் திறந்து பாடிய, (பரிமள) (சொல், பொருள், தமிழ்) மணம் வீசுகின்ற (நிகில கவிமாலை) எல்லாப் பாடல் மாலைகளையும் சூடியருளுவது (சீறடியே)

மும்மதம் உடைய மலை போன்ற கஜேந்திரன் (முது முதலை கவர்தர) பெரிய முதலையால் பிடித்துக் கொள்ளப் பட்டு, பெரிய மடு நடுவில், (வெருவி) அச்சமுற்று (கதறி) கூச்சலிட்டு, ஒரு முறை "ஆதிமூலமே" என்று அழைக்க வந்து உதவின கருணை வாய்ந்த (வரதன்) கேட்ட வரத்தைத் தருபவ ராகிய பெருமான், பகைமை பாராட்டிய இரணியனை (உகிர் நுதியின்) நகத்தின் நுனி கொண்டு (வகிரும்) கிழித்தெறிந்த, வலிமை வாய்ந்த, (அரி) நரசிம்மமூர்த்தி; (வடிவு) தனது உருவம் குறிய வடிவமாகி, மகா பலிச் சக்ரவர்த்தியிடம் சென்று அவனை,

பலமான சிறையில் அடைக்க வேண்டி, ஆகாச உச்சியும் கிழியும்படி, (முடிய) ஒரே நீளமாக வளர்ந்து விசுவரூபம் கொண்ட (முகில்) மேக வர்ணராம் திருமால், அரக்கன் ராவணனுடைய இருபது தோள்களான மலைகளும் மணிமுடிகள் ஒரு பத்தும் முறிபட்டு விழும்படி (அடு) கொல்ல வல்ல (பகழி) அம்பை ஏவின (குரிசில்) பெருமான் ஆகிய திருமாலின் மருமகன்; அசுரர்களின் (தளம்) சேனையும், போருக்கு வந்த தாரகாசுரனும்

மடிய, மலை பிளவு பட, மகர சல நிதி, குறுகி
மறுகி, முறையிட, முனியும் வடிவேலன், நீலகிரி

மருவு குருபதி, யுவதி, பவதி, பகவதி, மதுர
வசனி, பயிரவி, கவுரி, உமையாள், த்ரிசூலதரி

வநசை, மதுபதி, அமலை, விசையை, திரிபுரை, புநிதை
வநிதை, அபிநவை, அநகை அபிராம நாயகி தன்

மதலை, மலை கிழவன், அநுபவன், அபயன், உபய, சதுர்
மறையின் முதல், நடு, முடிவின் மண நாறு சீறடியே

இறந்து போகவும், கிரவுஞ்ச கிரி பிளவு படவும், மகர மீன்கள் உள்ள கடல் சுருங்கிக் கலக்கம் கொண்டு, (முறையிட) ஓலமிடும்படி, (முனியும்) கோபித்த, (வடி) கூரிய வேலாயுதத்தை உடையவன், நீலோற்பல கிரி எனப்பட்ட திருத்தணிகையில்

வீற்றிருக்கும் குருமூர்த்தி; (யுவதி) என்றும் இளையவள், (புவதி) தன்னிடமிருந்து எல்லாவற்றையும் உற்பத்தி செய்பவள் (பகவதி) திரு, செல்வம், புகழ், ஞானம், வீரம், வைராக்கியம் எனும் ஆறு குணங்களை உடையவள்; (மதுர வசனி) தேன் போன்ற இனிய வசனத்தை உடையவள். (பைரவி) பைரவராம் சிவனின் பத்தினி. (கவுரி) பொன்னிறம் உடையவள், உமையாள், முத்தலைச் சூலத்தை தரித்தவள் தாமரையில் வீற்றிருப்பவள், (மதுபதி) காளி, மலமற்றவள், (விசையை) வெற்றி புனைந்தவள்-துர்க்கை, (திரிபுரை) கீழ், நடு, மேல் லோகங்களின் தலைவி, தூய்மை மிக்கவள், (வநிதை) அழகில் சிறந்தவள் (அபிநவை) என்றும் புதியவள், (அநகை) பாபம் அற்றவள், அபரிதமான அழகியான தேவியின் (அபிராமி - பேரழகி)

குமாரன், மலைகளுக்கு உரிமை உடையவன், எல்லா உயிர்களுக்கும் அநுபவ சாட்சியாக உள்ளவன், அடைக்கலம் தருபவன், ஆகிய முருகப் பெருமானின் (சதுர் மறை...) நான்கு வேதங்களின் அடி, நடு, முடி என்னும் மூவிடத்தும் (மணம் நாறு) நறு மணம் கமழ்கின்ற, (உபய) இரண்டு திருவடிகளே.

அரணியில் அரணிய முரண் இரணியன் உடல்தனை, நகநுதி கொடு
சாபோங்கு நெடுங்கிரி, ஒடு ஏந்து, பயங்கரி

தமருக பரிபுர ஒலி கொடு நட நவில் சரணிய, சதுர்மறை
தாது அம்புய மந்திர வேதாந்த பரம்பரை

சரி வளை, விரி சடை, எரிபுரை வடிவினள்.
சததள முகுளித
தாமாங்குச மென் திரு தாள் அந்தர அம்பிகை

பூமியில். கோட்டை முதலிய காவலை உடைய (முரண்) வலிமையை கொண்ட, இரணியாசுரனுடைய உடலை, நகத்தின் நுனி கொண்டு, (சாடு ஓங்கு) கொன்று உயர்ந்த. பெரிய மலையன்ன உருவத்தைக் கொண்ட நரசிம்ம உருவத்தினள்; ப்ரம்ம கபாலத்தை கையில் ஏந்தின, அடியார்களின் அச்சத்தை நீக்குபவள் (அல்) பகைவர்களுக்கு அச்சத்தைத் தருபவள்.

உடுக்கை (பரிபுரம்) சிலம்பு இவைகள் ஒலிக்க நடனத்தை (நவில்) செய்கின்ற (சரணிய) திருவடிகளை உடைய (பரம்பரை) பராசக்தி. நான்கு வேதங்களாலும் துதிக்கப்படுகின்ற பரம்பரை; (தாது அம்புய) மகரந்தப் பொடிகளைக் கொண்ட தாமரையில் வீற்றிருக்கும் பரம்பரை; மந்திரங்களின் சக்தியாகிய பரம்பரை; வேத முடிவில் விளங்கும் பரம்பரை (பராசக்தி அல்லது மேலான யாவர்க்கும் மேலானவள்.)

வளையல் வகைகளை அணிந்தவளும், சடை விரிந்த தவக்கோலம் கொண்டவளும், நெருப்பைப் போன்ற உருவம் கொண்டவளும், நூற்றிதழ்த் தாமரையின் (முகுளித) அலரும் தன்மை வாய்ந்த, (தாமம்) மலர் மொட்டுப் போன்ற (அம்) அழகிய (குசம்) கொங்கை, மென்மை வாய்ந்ததும் (திரு) லக்ஷ்மீகரம் பொருந்தியதுமான (தாள்) திருவடிகள் இவைகளைக் கொண்டவளும், (அந்தர) பராகாசத்தில் உள்ளவளுமான (அம்பிகை) தேவி

தருபதி சுரரொடு சருவிய அசுரர்கள்
தட, மணி முடி, பொடி
தான் ஆம்படி, செங்கையில், வாள் வாங்கிய சங்கரி

இரண கிரண மடமயில், ம்ருகமத புளகித இளமுலை, இள
நீர் தாங்கி நுடங்கிய நூல் போன்ற மருங்கினள்

இறுகிய சிறு பிறை எயிறு உடை யம படர்
எனது உயிர் கொள வரின்
யான் ஏங்குதல் கண்டு, எதிர் தான் என்று கொளுங் குயில்

இடு பலி கொடு திரி இரவலர் இடர் கெட
இடும் மன கர தல
ஏகாம்பரை இந்திரை மோகாங்க சுமங்கலை

எழுதிய படமென, இருள் அறு, சுடர் அடி இணை தொழு மவுனிகள்
ஏகாந்த சுகம் தரு பாசாங்குச சுந்தரி

(தரு) கற்பக விருக்ஷத்தைக் கொண்ட, நகரமாகிய அமராவதியில் வாழும் தேவர்களுடன் போராடின அசுரர்களின் (தட) விசாலமான, ரத்ன க்ரீடங்கள், பொடிபட்டு விழும்படி. (தனது) செவ்விய திருக்கரத்தில் வாளை ஏந்தி இருக்கும் சங்கரி

(இரணம்) பொன் போன்ற ஒளியைக் கொண்ட மடப்பமுடைய (Delicate) மயில் அனையவள்; கஸ்தூரி அணிந்துள்ளதும், புளகிதம் கொண்டதுமான இளமை வாய்ந்த கொங்கையாகிய இளநீர் (இளநீர் போன்ற கொங்கையின்) பாரத்தைத் தாங்குதலால், (நுடங்கிய) துவட்சியுற்றதாய், நூல் போல் மெலிந்ததான (மருங்கினள்) இடையை உடையவள்.

அழுத்தமாய் அமைந்துள்ள, சிறு பிறை போன்ற பற்களை உடைய யம தூதர்கள், என்னுடைய உயிரைக் கவர்தற்கு வந்தால் (அப்போது) நான் வருந்துதலைக் கண்டு என் எதிரே வந்து என்னை ஆட்கொண்டருளும் குயில் அனைய தேவி

இடுகின்ற (பலி) பிச்சையைக் கொண்டு திரிகின்ற (இரவலர்) யாசகர்களின் துன்பம் ஒழிய (இடும் மன) அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் மனமும், திருக்கரத்தையும் உடைய ஏகாம்பரை (காஞ்சி ஏகாம்பர நாதரின் தேவியாகிய ஏலவார் குழலி. (இந்திரை) முக்தி லக்ஷ்மி. கவர்ச்சியான அங்கங்களையுடைய சுமங்கலி

திரையில் தீட்டப்பட்ட ஓவியம் போல் (கருவி கரணங்கள் அடங்கி) இருந்து, அஞ்ஞான இருளை அழித்து ஒழிக்கும்

கரணமும் மரணமும் மலமொடு உடல் படு
கடு வினை கெட நினை
கால அந்தரி சுந்தரி நீலாஞ்சனி, நஞ்சு உமிழ்

கனல் எரி கண பண, குண மணி, அணி பணி
கன வளை, மரகத,
காசாம்பரகஞ்சுளி தாசு ஆம் படி கொண்டவள்.

கனை கழல் நினையலர் உயிர் அவி பயிரவி
கவுரி, கமலை, குழை
காதார்ந்த செழும் கழுநீர் தோய்ந்த பெரும் திரு

ஞான ஒளி வீசும், தனது திருவடிகள் இரண்டையும் தொழுகின்ற மவுன ஞானிகளுக்கு. (ஏக அந்த சுகம்) முடிவான ஒன்று எனப்படும் முத்தி நிலை ஆனந்தத்தைத் தருகின்ற, பாசம், அங்குசம் இரண்டையும் திருக்கரத்திற் கொண்டுள்ள சுந்தரி- அழகி. (பாசத்தால் அடியார்களின் ஆணவம் என்ற யானையை பிடித்து அடக்கி- அங்குசத்தால் அதனை அடியோடு மாய்த்து விடுகிறாள் அம்பிகை)

இந்திரியங்களின் சேஷ்டைகள், இறப்பு, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள், சரீரம் அனுபவிக்கவேண்டிய (கடு) பொல்லாத சஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமியம் என்ற வினைகள் கெட்டு அழியும்படி (நினை) தன் மனத்தில் நினைத்து அவ்வாறே வரம் பாலிக்கும் யுகாந்த கால முடிவில் விளங்குபவள், சுந்தரி- (அடியார்களின் நெஞ்சக்) குகையில் இருப்பவள், கறுப்பு நிறமுள்ள மையை பூசிக்கொள்பவள், விஷத்தை உமிழ்கின்ற எரிகின்ற நெருப்பையும், (கண பணம்) கூட்டமான படங்களையும், (குண மணி) உயர்ந்த ரத்னங்களையும், (அணி) கொண்டதுமான (பணி) பாம்பை, சிறப்பான தோள் வளையாக அணிந்தவள்; பச்சை நிறத்தினள், (காசு) காயாம்பு நிறமுள்ள (அம்பர) ஆடையையும், (கஞ்சுளி) சட்டையையும் வஸ்திரமாக ஏற்றுக் கொண்டவள்

ஒலிக்கின்ற தனது கழலை (திருவடிகளை)- அன்புடன்- தியானிக்காதவர்களின் உயிரைப் போக்குகின்ற பயிரவி, (கவுரி) பொன் நிறமானவள், (கமலை) கமலாம்பிகை, காதில் குழையாக நீலோற்பல மலரைத் தரித்திருக்கும் (பெரும் திரு) பெருமை வாய்ந்த தேவி- மோட்ச லட்சுமி

கரை பொழி திருமுக கருணையில் உலகெழு
கடல் நிலை பெற வளர்
காவு ஏந்திய பைங்கிளி, மா சாம்பவி தந்தவன்

அரண் நெடு வட வரை அடியொடு பொடி பட
அலைகடல் கெட. அயில்
வேல் வாங்கிய செந்தமிழ் நூலோன் குமரன் குகன்

அறுமுகன், ஈருபதொடு இருபுயன், அபினவன்,
அழகிய குறமகள்
தார் வேய்ந்த புயன், பகையா மாந்தர்கள் அந்தகன்

அடன் மிகு, கட தட, விகடித மத களி(று)
அனவரதமும் அகலா
மாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்

அதிபதி என வரு பொரு திறல் முருகனை
அருள் பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் தேவேந்திர சங்கமே.

உள்ளம் கனிந்து வீசுகின்ற திருமுக கருணை கடாட்சத்தால்
ஏழு உலகங்களும், ஏழு கடல்களும் நிலைத்திருக்கும்படி
(வளர்) பரிபாலனம் செய்யும், காத்தல் தொழிலை மேற்
கொண்டுள்ள பசுமையான கிளி போன்றவள்; மகா
சாம்பவியான பார்வதி தேவி தந்து அருளியவன்.
கோட்டை மதில் போல அமைந்துள்ள. (நெடு) பெரிய, வடக்கே உள்ள
மேரு மலை, அடியோடு பொடிபட்டு அழியவும், அலை வீசும் கடல்(வற்றி)
நிலைகுலையவும், கூரிய வேலாயுதத்தை (வாங்கிய) செலுத்தின
செந்தமிழ் நூல்களுக்கு உரிய தமிழ்க் கடவுள், குமரன், குகன்
ஆறுமுகன், (10+2) பன்னிரண்டு திருப்புயங்கள் உடையவன், என்றும்
புதியவன், அழகுள்ள குறமகள் வள்ளியினுடைய. மாலையை
அணிந்த திருப்புயங்கள் உடையவன். பகைமை பூண்டுள்ள
வர்களுக்கு யமன் போன்றவன்.
வலிமை மிகுந்த. மதநீர் பாயும் இடத்தைக் கொண்டதும். (விகடிதம்)
வேடிக்கையான திருவுருவம் கொண்டதுமான(மத) பெருமை வாய்ந்த
கணபதியை சதா தியானித்து இருக்கும் அடியார்களின் சிந்தையில்
தானும் வாழ்ந்து குடி கொள்பவனை (விளங்கியும்) திருச்செந்தூர்க்கு
அதிபதி என விளங்கும், போரில் வல்ல முருகப் பெருமானை,
அவரது அருள் கிட்டும்படி தோத்திரம் செய்து வணங்குபவர்களை
(யார் யார் என்று) ஆராய்ந்து கண்டு பிடித்து வணங்கு
வார்கள், தேவேந்திரனும் அவனுடைய பரிவாரங்களும்.

வேல் வகுப்பு

(3) பருத்த முலை, சிறுத்த இடை, வெளுத்த நகை, கருத்த குழல்,
சிவத்த இதழ், மறச் சிறுமி விழிக்கு நிகராகும்

பனைக்கை, முக படக், கரட மதத், தவள, கசக் கடவுள்
பதத்து இடு நிகளத்து முளை தெறிக்க அரம் ஆகும்

பழுத்த முது தமிழ்ப் பலகை இருக்கும் ஒரு கவிப் புலவன்
இசைக்கு உருகி, வரைக் குகையை இடித்து வழி காணும்

வேல் வகுப்பு

பெருத்திருக்கும் தனபாரங்களையும், சிறுத்திருக்கும் இடையையும், வெண்மை நிறம் வீசும் பற்களையும், கருமை நிறம் கொண்ட கூந்தலையும், சிவந்த வாயிதழ்களையும் உடைய, வேடர் சிறுமியாம் வள்ளி பிராட்டியின் திருக்கண்களுக்கு ஒப்பாகும் (குகனது வேலே)

வள்ளியின் பஞ்ச கிருத்திய சக்திகள்

பருத்த முலை - பக்குவமடைந்த நிலையைப் புலப்படுத்துவதால்: தோற்றம்
சிறுத்த இடை: முலைப்பாரத்தைத் தாங்குவதால் - காத்தல் - திதி
வெளுத்த நகை: சிரித்தெரி கொளுத்துமாதலின் - ஸம்ஹாரம்
கருத்த குழல்: இருளும் மறைப்பும் கொண்டது: மறைத்தல் - திரோபவம்
சிவத்த இதழ்: ஞானம்-உபதேசம் அருளுவதால் - அநுக்கிரகம்

பனைமரம் போன்று நீண்ட துதிக்கையும், (முகபடாம்) முகத்தில் அணிந்த சித்திர வேலைப்பாடு நிறைந்த துணியையும் (கரடமதம்) இரண்டு கபால மத நீரையும். (தவள) வெண்ணிறத்தையும் கொண்ட (கஜ கடவுள்) ஐராவதம் என்னும் யானையை உடைய தேவனாம் இந்திரனது. கால்களில் (சூரனால்) இடப்பட்ட (நிகளத்து) விலங்கின் முளையை பிளந்தெறிவதற்கு அரம் போல் செயல்படும் (குகன் வேலே)

ஞானம் கனிந்த (முது) பழமை வாய்ந்த மதுரை தமிழ்ச் சங்கப் பலகையில் வீற்றிருந்த, (ஒரு) ஒப்பற்ற கவிப் புலவனாகிய நக்கீரனுடைய இசையுடன் பாடின திருமுருகாற்றுப்படைக்கு (மனம்) உருகி. (அவர் அடைபட்டிருந்த) வரை - மலைக் குகையை இடித்துத் தள்ளி வழி திறந்து விட்டது (மயில் நடத்து குகன் வேலே)

பசித்து அலகை முசித்து அழுது முறைப்படுதல் ஒழித்து
அவுணர் உரத்து உதிர நிணத் தசைகள் புசிக்க அருள் நேரும்

சுரர்க்கும் முநிவரர்க்கும் மகபதிக்கும் விதி தனக்கும்
அரி தனக்கும் நரர் தமக்கும் உறும் இடுக்கண் வினை சாடும்

சூர்ப் பரிதி ஒளிப்ப, நில ஒழுக்கு மதி ஒளிப்ப, அலை
அடக்கு தழல் ஒளிப்ப, ஒளிர் ஒளிப்பிரபை வீசும்

துதிக்கும் அடியவர்க்கு ஒருவர் கெடுக்க, இடர் நினைக்கின்,
அவர் குலத்தை முதலறக் களையும், எனக்கு ஓர் துணையாகும்

சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை, அடுத்த பகை
அறுத்து எறிய, உறுக்கி எழும் அறத்தை நிலை காணும்

தருக்கி நமன் முருக்க வரின் எருக்கு, மதி தரித்த முடி
படைத்த விறல் படைத்த இறை கழற்கு நிகராகும்

பசியினால் வருந்தி. (அலகை) பேய்க் கூட்டங்கள் (முசித்து) கிலேசித்து, மெலிந்து. அழுது (உணவு வேண்டும் என்று) முறையிடுதல் ஒழித்து (முறையிடாதபடி செய்து) அசுரர்களின் (உரத்து) மார்பிடத்தினின்று வரும் ரத்தம். கொழுப்பு. தசைகள் இவைகளை (அப்பேய்க்கூட்டங்களுக்கு) உண்ணும்படி அருள் பாலிக்கும் (குகன் வேலே)

தேவர்களுக்கும். முநிவர்களுக்கும், இந்திரனுக்கும். (விதி) பிரமனுக்கும் திருமாலுக்கும். மனிதர்களுக்கும். நேரிடும் துன்பங்களையும், தீவினைகளையும் அழித்து ஒழிக்கும் (குகன் வேலே)

ஒளி வீசும் சூரியன், (ஒளிப்ப)-இதன் ஒளிக்கு முன். நமது ஒளி எந்த மூலை என்று அஞ்சி- ஒளிந்து மறையவும், குளிர்ந்த கிரணங்களை (ஒழுக்கு) வீசும் (மதி) சந்திரன் அங்ஙனமே ஒளிந்து மறையவும், கடல் நீரை அடக்கி ஆளும் (தழல்) வடவாமுக அக்னி அவ்வாறே ஒளிந்து மறையவும், ஒளி விடுகின்ற (ஒளிப் பிரபை) பேரொளியை - ஞானசக்தியை வீசும் (குகன் வேலே)

துதித்துப் போற்றும் அடியவர்களுக்கு, ஒருவர் கெடுதி செய்ய, இடைஞ்சல் நினைத்தால், அவர் குலத்தையே வேருடன் அழித்து ஒழிக்கும்; எனக்கு ஒப்பற்ற துணையாக இருந்து உதவி புரியும் (குகன் வேலே)

சொல்லில் அடங்காத பெருமையைக் கொண்ட திருப்புகழை விருப்புடன் செப்பியவரை நெருங்கி வரும் பகைகளை, வேருடன் அறுத்து எறிவதற்கு, உக்ரத்துடன் புறப்படும்; அற நெறியை நிலைத்து நிற்கும்படி செய்யும் (குகன் வேலே)

அகங்கரித்த ஊக்கத்துடன் யமன் அழிக்க வந்தால் (அப்போது), எருக்கு மாலையையும், நிலவையும் சூடியுள்ள முடியை உடையவரும்

தலத்தில் உள கணத்தொகுதி, களிப்பின உணவழைப்பதென
மலர்க்கமல கரத்தின் முனை விதிர்க்க வளைவாகும்

தனித்து வழி நடக்கும் எனது இடத்தும் ஒரு வலத்தும்
இரு புறத்தும் அருகு அடுத்து இரவு பகற் துணையதாகும்

சலத்து வரும் அரக்கர் உடல் கொழுத்து வளர் பெருத்தகுடல்
சிவத்த தொடை எனச் சிகையில் விருப்பமொடு சூடும்

திரைக் கடல் உடைத்து நிறை புனற் கடிதுகுடித்து, உடையும்
உடைப்பு அடைய அடைத்து உதிரம் நிறைத்து விளையாடும்

திசைக்கிரியை முதற் குலிசன் அறுத்த சிறை முளைத்ததென,
முகட்டின் இடை பறக்க அற விசைத்து அதிர ஓடும்

(விறல் படைத்த) வெற்றி - வீரம் கொண்ட வருமான இறைவனும் சிவ பெருமானது திருவடிக்கு ஒப்பாக நின்று உதவும் (குகனது வேலே)

பூமியில் உள்ள உயிர் வர்க்கங்கள் யாவும், மகிழ்ச்சி அடையும் அளவுக்கு (உணவு) உண் பொருள்களை வரவழைக்க வேண்டி வந்தால், (தாமரை) மலரை ஒத்த இறைவன், திருக்கரத்தில் இருந்தபடியே, வேலின் முனைப்பாகத்தை - நுனியை - (விதிர்க்க) அவர் அசைத்த மாத்திரத்தில் (உணவுப் பொருள்கள் யாவற்றையும்) சுற்றி வளைத்துக் கொண்டு வந்து சேர்க்கும் (குகன் வேலே)

தனிமையாக வழி நடந்து செல்லும் என்னுடைய இடது புறத்தும். ஒரு வலது புறத்தும், முன்னும் பின்னுமாக இரண்டு பக்கங்களிலும் - ஆக நாற்புறத்தும், சமீபத்திலேயே அடுத்திருந்து - பக்கத்திலிருந்து - இரவும் பகலும் துணையாக இருந்து என்னைக் காப்பாற்றும்.

மிக்க கோபத்துடன் வந்த அசுரர்களின் உடலில் கொழுத்து வளர்ந்திருந்த பெரிய குடல்களைச் செந்நிற மாலை போல் தனது முடியில் ஆசையுடனே சூடிக்கொள்ளும் (குகன் வேலே)

அலைகள் வீசும் கடலைப் பிளந்து, நிறைந்துள்ள புனல் (நீரை) வேகத்தில் குடித்தும், உடைத்த உடைப்பு முழுமையும் அடைத்து (அங்கு) அசுரர்களின் ரத்தத்தை நிரப்பியும் விளையாடும் (வேலே)

திசைகளில் உள்ள மலைகளை (முதல்) முன்னாளில், குலிசாயுதத்தை உடைய இந்திரன் அறுத்துத் தள்ளின இறக்கைகள் (மீண்டும் அம்மலைகளுக்கு) முளைத்து விட்டனவோ என்னும்படி. அண்ட முகட்டிலே (உச்சியிலே) பறந்து (அற) மிகவும் (விசை) வேகத்துடனே திசைகள் அதிர ஓடுவதாகும் (குகன் வேலே)

சினத்து அவுணர் எதிர்த்து ரண களத்தில் வெகு குறைத் தலைகள் (14)
சிரித்து எயிறு கடித்து விழி விழித்து அலற மோதும்

திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனது உளத்தில் உறை கருத்தன் மயில் நடத்து குகன் வேலே.

(14)

கோபம் கொண்டுள்ள அசுரர்கள் எதிர்த்து வந்த போர்க் களத்திலே, அவர்களுடைய நிரம்ப உடலற்ற தலைகள் சிரிக்கவும், (எயிறு) பற்களைக் கடிக்கவும், கண்களை விழி விழி என்று விழிக்கவும், (வாய்கள்) அலறவும், அவர்களைத் தாக்கும் (வேல்) (இத்துணைக் குணங்கள் வாய்த்தது எது என்றால் அதுதான்) திருத்தணிகை மலையில் தோன்றி விளங்கி அருள்பாலிப்பவ கிய ஒப்பற்ற மூர்த்தியும், மலை விருத்தன்-மலை கிழவோன்-மலை மேலோன் எனப் பெயர் பெற்றவனும், என்னுடைய உள்ளத்திலே உறையும் திருவுள்ளத்தைக் கொண்டவனும், மயில் வாகனமாக நடத்துபவனுமான குகமூர்த்தியின் வேலாயுதமே.

(4)

திருவேளைக்காரன் வகுப்பு

ஆன பய பத்தி வழிபாடு பெறு முத்தி, அது
வாக நிகழ் பத்த சன வாரக் காரனும்

ஆர மதுரித்த கனி காரணம் முதல் தமைய
னுடன் உணக்கை பரி தீமைக் காரனும்

திருவேளைக்காரன் வகுப்பு

(பய பத்தி) பயத்துடனும் பத்தியுடனும் (ஆன வழிபாடு) செய்யப்படும் வழிபாடு (ஒன்றே) தாம் பெற விரும்பும் முத்தி என்று எண்ணி வழிபடுகின்ற - அவ்வழிபாட்டையே தமது தவ ஒழுக்கமாகக் கொண்டு வழிபடுகின்ற பக்த ஜனங்களின் மீது (வாரக் காரன்) அன்பைச் செலுத்துபவன் (குறித்த திருவேளைக்காரன்)
(ஆர) நிரம்ப (மதுரித்த) இனிமை கொண்டதான மாதுளங் கனியை பெற வேண்டிய காரணத்தால் (முதல்) முன்பொரு காலத்தில், தமையனாம் கணபதியுடன் (உணக்கை) அந்தப் பழத்தை உண்ணும் சாமர்த்தியப் போட்டியில் (பரி) வருத்தத்தையும், (தீமை) குற்றத்தையும் கண்டவன் (அல்) கோபத்தையும் பெற்றவன்

(15)

ஆகமம் விளைத்(த) அகில லோகமும் நொடிப்பளவில்
ஆசையொடு சுற்றும் அதி வேகக் காரனும்

ஆணவ அழுக்கடையும் அவியை விளக்கி
அநுபூதி அடைவித்த தொரு பார்வைக் காரனும்

அடலைவு பட்ட அமரர் நாடது பிழைக்க
அமராவதி புரக்கும் அடல் ஆண்மைக் காரனும்

ஆடக விசித்ர கன கோபுர முகப்பில்
அருணை புரியில் நிற்கும் அடையாளக் காரனும்

ஆயிர முகத்து நதி பாலனும், அகத்(து) அடிமை
யானவர் தொடுத்த கவி மாலைக் காரனும்

ஆறுமுக வித்தகனும் ஆறிரு புயத்தரசும்
ஆதி முடிவற்ற திரு நாமக் காரனும்

(15)

வேத சாஸ்திரங்கள் (தரும நூல்கள்) நிறைந்துள்ள/ பரவியுள்ள
எல்லா உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதில் விருப்பத்தொடு
சுற்றி வந்த மிகுந்த வேகத்தை உடையவனும் (... வேளைக்காரனே)
ஆணவம் என்கின்ற மலம் மூடியுள்ள ஆவியை- உயிரை. (விளக்கி)
அந்த மலம் நீங்க விளக்கம் தந்து, ஞான ஒளியை பரப்பி (அநுபூதி)
ஞான அனுபவத்தை எனக்குப் புகட்டிய (ஒரு) ஒப்பற்ற திருக்கண்
பார்வையை உடையவனும் - நயன தீட்சையை அளித்தவன்
- குறத்தி திரு வேளைக்காரன்.

தடுமாற்றமும் அலைச்சலும் அடைந்திருந்த தேவர்களின் பொன்னு
லகமானது (பிழைக்க) செழிப்பு உற, (அவ்வுலகின் தலைநகராம்) அமரா
வதியைக் காப்பாற்றின (அடல்) வெற்றியுள்ள (ஆண்மை) வலிமை
வாய்ந்தவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)
பொன்மயமானதும், விசித்ர வேலைப்பாடு அமைந்த விநோதமானதும்
(கனம்) பெருமை வாய்ந்ததும் ஆன கோபுரத்தின் வாயிலில்,
திருவண்ணாமலையில், வீற்றிருந்தருளும், நேரிற கண்டு களிக்கப்
பிரத்தியக்ஷ மூர்த்தியாய் (எனக்கு) வந்தவனும் (வேளைக்காரனே)
ஆயிர முகங்களாகப் பரந்து செல்லும் கங்காநதியின் குமாரனும்
உள்ளத்தே மெய்யடிமை பூண்டவர் அமைத்த பாமாலைகளை
அணிபவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)
ஆறுமுகம் கொண்ட ஞான சொரூபனும், பன்னிரண்டு திருப்புயங்
களைக் கொண்ட அரசனும், முதலும் இறுதியும் இல்லாதவன் என்கிற
திருப்பெயரை உடையவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)

யான் எனது எனச் சருவும் ஏன சமயத்தெவரும் (16)
யாரும் உணர்தற்கு அரிய நேர்மைக் காரனும்

யாது நிலை அற்று அலையும் ஏழு பிறவிக்கடலை
ஏற விடு நற் கருணை ஓடக்காரனும்

ஏரகம். இடைக்கழி. சிராமலை, திருப்பழநி
ஏர் அணி செருத்தணியில் வாசக் காரனும்
ஏழையின் இரட்டை வினை ஆயதொருடற், சிறை
யிராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்

யாமளை மணக்கு முக சாமளை, மணிக்குயிலை
யாய் என அழைத்(து) உருகு நேயக் காரனும்

ஏதம் அற நிச்சய மனோலய விளக்கொளியும்
யாக முநிவர்க்குரிய காவற் காரனும்

ஈரிரு மருப்புடைய சோனை மத, வெற்பு இவரும்
யானை அளவில் துவளும் ஆசைக் காரனும்

(16)
யான் எனது என்கின்ற அகங்கார - மமகாரங்களைக் கொண்டு (சருவும்) போராடும் இழிவான சமயவாதிகள் யாராயிருந்தாலும் அவர்களால் எந்த வகையிலும் அறிந்துணர முடியாத நுணுக்கமான சத்தியப் பொருளாய் இருப்பவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)

சற்றும்/ கொஞ்சமேனும் நிலைத்தல் இல்லாது அலைய வேண்டியிருக்கின்ற ஏழு பிறவி என்கின்ற கடலினின்றும் கரையேறவிட வல்ல நல்ல கருணையாம் ஓடத்தைச் செலுத்துபவனும் (. . . .)
சுவாமிமலை, திருவிடைக்கழி, திரிசிராப்பள்ளி. திருப்பழநி. அழகு வாய்ந்த திருத்தணி என்னும் தலங்களில் வீற்றிருப்பவனும் (. . . .)

ஏழையாகிய அடியேனுடைய, நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளின் காரணமாய் ஏற்பட்ட ஒரு உடல் என்னும் இந்தச் சிறைச்சாலையில் இருந்து. வேதனைப்படாமல் என்னை விடுவித்து ஆண்ட மகா நீதிமானும் (குறத்தி திரு வேளைக்காரனே)
ச்யாமள (ஒரு வகைப் பச்சை) நிறத்தை உடையவள், தெய்வீக மணம் வீசும் பச்சை நிறத்தை உடையவள், அழகிய குயில் போன்றவளுமாகிய பார்வதியை தாய் என்று அன்புடன் உருகி அழைக்கும் நேசம் வாய்ந்தவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)

துன்பம்/கேடு ஒழிய, திடமான. மனம் ஒடுங்கும் நிலையைத் தருகின்ற ஜோதி ஒளிப்பிழம்பும், வேள்வி இயற்றும் முநிவர்களுக்கு ஆதரவான காவற்காரனும் (குறத்தி திரு வேளைக் காரனே)
நான்கு தந்தங்களை உடைய, விடா மழை போல மதம் சொரியும், மலை போன்ற ஐராவதத்தின் மேல் ஏறி வரும் தேவசேனையின்பால் மன நெகிழ்ச்சியுறும் அன்பைச் செலுத்துகின்றவனும் (. . . .)

ஏடுஅவிழ் கடப்ப மலர் கூதளம் முடிக்கும் இளை
யோனும், அறிவிற் பெரிய மேன்மைக் காரனும்

வானவர் பொருட்டு, மகவானது பொருட்டு, மலர்
வாவியில் உதித்த முக மாயக் காரனும்

வாரண பதிக்கு (உ)தவு நாரணன் உவக்கு மரு
மானும், அயனைக் கறுவு கோபக் காரனும்

வாழியென நித்தம் மறவாது பரவிற், சரண
வாரிசம் அளிக்கும் உபகாரக் காரனும்
மாட மதில் சுற்றிய த்ரிகூட கிரியிற், கதிர் செய்
மா நகரியிற், கடவுள் ஆயக் காரனும்

வாள் எயிறு அது உற்ற பகுவாய் தொறு நெருப்பு உமிழும்
வாசுகி எடுத்து உதறும் வாசிக் காரனும்

வாளகிரியைத் தனது தாளில் இடியப் பொருது
வாகை புனை குக்குட பதாகைக் காரனும்

(17)

இதழ்கள் விரிகின்ற கடப்ப மலரையும், கூதள மலரையும்
சிரசில் அணிகின்ற இளைவனும், ஞானத்திற் பெரிய சிறப்பு
வாய்ந்தவனும் (குறத்தி திரு வேளைக் காரனே)
தேவர்களின் பொருட்டும், இந்திரன் பொருட்டும், மலர் நிறைந்த
சரவணப் பொய்கையில் தோன்றியருளின ஆறுமுக விசேடத்தைக்
கொண்ட அற்புதமான அழகு படைத்தவனும் (... வேளைக்காரனே)
ஐராவதத்தின் தலைவனை இந்திரனுக்குப் பற்பல உதவிகளைச் செய்த
திருமால் மகிழ்ச்சி அடையும் மருமகனும், பிரமனைக் கோபித்த
கோபக் காரனும் (குறத்தி திரு வேளைக்காரனே)
"வாழி" என்று நாள் தோறும் மறவாமல் துதித்தால், தனது திருவடித்
தாமரையை தந்து அருளும் உபகாரக் காரனும் (... வேளைக்காரனே)
மாட மாளிகைகளும் மதில்களும் சூழ்ந்து நிறைந்துள்ள குற்றால நன்ன
கரிலும், கதிர்காமம் என்னும் பெரிய நகரத்திலும், தேவர்கள்
சூழ வீற்றிருப்பவனும். [கடவுள் ஆயக்காரன்: தேவர் கூட்டத்தை
உடையவன் - தேவர் கூட்டத்தினில் விளங்குபவன்]
வாள் போல் பிரகாசித்துக் கூர்மை கொண்ட பற்களையுடைய, திறந்
துள்ள வாய்களில் நெருப்பு ஜ்வாலையை கக்கும், வாசுகி என்னும்
சர்ப்ப ராஜனை தனது மூக்கால் பிடித்து உதறுகின்ற குதிரையாம்
மயிலை வாகனமாக உடையவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)
சக்ரவாள கிரியைத் தன்னுடைய கால்களினால், பொடியாகும்படி
சண்டை செய்து, வெற்றி கொள்ளும் சேவலை தனது கொடியாக
உடையவனும் (குறத்தி திரு வேளைக்காரனே)

மாசுஇல் உயிருக்கு உயிரும், மாசு இல் உணர்வுக்கு உணர்வும்
வானில் அணுவுக்கு அணு — உபாயக் காரனும்

வாதனை தவிர்த்த குருநாதனும், வெளிப்பட
மகா அடவியில் நிற்பதொர் — சகாயக்காரனும்

மீனவனும் மிக்க புலவோரும் உறை பொற்பலகை
மீது அமர் தமிழ் த்ரய — விநோதக் காரனும்

வேரி மது மத்த, மதி, தாதகி, தடுக்கை புனை
வேணியர் துதிப்பதொரு — கேள்விக் காரனும்

வேலைதுகள் பட்டு மலை சூரன் உடல் பட்டு உருவ
வேலை உற விட்ட தனி — வேலைக் காரனும்

மீன் உலவு கிர்த்திகை குமாரனும், நினைக்கும் அவர்
வீடு பெற வைத்து அருள் — உதாரக் காரனும்

(18)

குற்றமற்ற ஜீவாத்மாக்களுக்குள் உயிர்ப்பு சக்தியாக இருப்பவனும் கெடுதல் அற்ற உள்ளத்துள் உள் ஒளியாக இருப்பவனும், ஆகாயத்தில் காணப்படும் அணுக்களுக்குள் சிறிய அணுவாய் இருக்கும் பெரிய தந்திரக்காரனும் (குறத்தி திருவேளைக்காரனே)

எனது பிறவி வேதனையைத் தீர்த்து உலக வாசனையே இல்லாத படி செய்த (வாசனாமலத்தை ஒழித்த) குருமூர்த்தியும், ப்ரத்யக்ஷமாக பெருங் காட்டினிடையே தோன்றி எனக்கு பெரிய உதவியைச் செய்தவனும் (... வேளைக்காரனே)

மீனைக் கொடியாகக் கொண்ட பாண்டிய வம்சத்தில், உக்ர பாண்டியனாக உதித்தவனும், அறிவில் மிக்க சங்கப்புலவர்கள் வீற்றிருக்கும் அழகிய சங்கப் பலகையின் மேல் வீற்றிருந்த. முத்தமிழ் வல்ல, ஒப்பில்லாத திறமை உடைய விசித்திரமானவனும் (... வேளைக்காரனே)

நறுமணம் வீசும் தேன் நிரம்பி இருக்கும் ஊமத்தம் பூ, நிலவு (தாதகி) ஆத்தி. (தடுக்கை) கொன்றை இவைகளை தரித்துள்ள சடையை உடைய சிவபெருமான், துதி செய்யும் தன்மை வாய்ந்த, கல்வி சிரேஷ்டனும் (அ) ஒப்பற்ற கல் ஞானம் உள்ளவனும் (... வேளைக்காரனே)

கடல் தூள் படவும், எழுகிரியுடன் சூரன் உடலிலும் பட்டு உருவிப் போம்படி வேலாயுதத்தைப் பொருந்திய வகையிற் செலுத்தின ஒப்பற்ற தொழில் திறமை வாய்ந்தவனும் (... வேளைக்காரனே)

நக்ஷத்திரமாக உலவுகின்ற கார்த்திகை மாதர்களின் குமாரனும் தன்னைத் தியானிப்பவர்கள் மோக்ஷ வீட்டைப் பெறும்படி வைக்கும், அருள் கொண்ட தயாமூர்த்தியும் (குறத்தி திரு வேளைக்காரனே.)

மேனை அரிவைக்குரிய பேரனும் மதித்த திறல் வீரனும்
அரக்கர் குல சூறைக்காரனும்

வேதியர் வெறுக்கையும் அநாதிபர வஸ்துவும்
விசாகனும் விகற்ப வெகு ரூபக்காரனும்

வேடுவர் புனத்தில் உருமாறி முனி சொற்படி
வியாகுல மனத்தினொடு போம் விற்காரனும்

மேவிய புனத்து இதணில் ஓவியம் எனத் திகழும்
மேதகு குறத்தி திரு வேளைக்காரனே

(19)

பர்வதராஜன் மனைவி மேனை எனும் மாதின் பேரனாக வந்தவனும், யாவரும் மதித்துப் போற்றும்படியான வலிமை வாய்ந்த வீரனும், அசுரர் குலத்தை அழிப்பதில் சூறைக்காற்று போன்றவனும் (.. வேளைக்காரனே)
மறையவர்க்கு செல்வநிதியாக விளங்குபவனும், அநாதியான பரம்பொருளும், விசாக நக்ஷத்திரத்திற்கு உரியவனும், பல வித உருவங்களை எடுத்தவனும் (குறத்தி திரு வேளைக்காரனே).
வேடர்களின் தினைப்புனத்தில், தன் சுய உருவத்தை மாற்றிக் கொண்டு நாரத முனிவர் சொன்னபடி, கவலை பொருந்திய மனத்துடன் சென்ற, வில் ஏந்திய வேட உருவத்தினனும் (... வேளைக்காரனே)
மேவிய மலையிடத்தே இருந்த தினைப்புனத்து பரண் மீதே வரையப்பட்ட சித்திரம் போல அழகாக விளங்கின. (மேதகு) பெருமை மிக்க வள்ளி பிராட்டியுடன், பல விதத் திருவிளையாடல்கள் செய்து அவளுடன் பொழுதைப் போக்குபவன்

5 பெருத்த வசன வகுப்பு

(முருகப் பெருமான் உபதேசித்த மௌன உபதேசத்தின் சிறப்பைக் கூறுவது)

காபி — ஆதி

அருக்கன் உலவிய சகத்ரயமும் இசை
அதிற் கொள் சுவை என அனைத்தும் நிறைவதும்

பெருத்த வசன வகுப்பு

சூரியன் உலவுகின்ற 'பூர், புவ, சுவர்' என்னும் மூவுலகங்களிலும் (இசை) சொல்லப்படுகின்ற, (அதில் கொள்) அவ்வுலகங்களில் உள்ளதான எல்லா இன்ப நுகர்ச்சிகளும் இதுவே எனும்படி எல்லாப் பொருள்களும் நிறைந்துள்ளதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

அவஸ்தை பலவையும் அடக்கி, அகிலமும்
அவிழ்ச்சி பெற இனிதிருக்கும் மவுனமும்

அசட்டு வெறு வழி வழக்கர் அறுவரும்
அரற்றுவன பொருள் விகற்ப மொழிவதும்

அழுக்கு மல இருள் முழுக்கின் உழல்வதை
அடக்கி அவநெறி கடக்க விடுவதும்

<u>சந்த்ர கொன்றை</u>

எருக்கும் இதழியும் முடிக்கும் இறை குரு
எமக்கும் இறையவன் எனத் திகழுவதும்

இரட்டை வினை கொடு திரட்டு மல வுடல்
இணக்கம் அற, ஒரு கணக்கை அருள்வதும்

வேதனைகள், துன்பங்கள் அனைத்தையும் அடக்கி ஒழித்து, எல்லாம (அவிழ்ச்சி பெற) (உரை அவிழ. உணர்வவிழ, உளமவிழ. உயிரவிழ என்று சீர்பாத வகுப்பில் கூறியபடி) சகலமும் அற்று நீங்க, நிஷ்களமான ஆனந்த நிலையான மவுன நிலையை அருளுவது (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

அறிவிலாததும், சத்து அற்றதுமான வழியில் வழக்கிடுவோரான புறச்சமய வாதிகள் அறுவரும் கூச்சலிடுவதான பொருள் மாறுபாடுகளை (மொழிவதும்) எடுத்து விளக்குவதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

அழுக்கு மயமான ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மல இருட்டிலே மூழ்கி அலைவதை (அடக்கி) ஒழித்து தீய/பாவ நெறியைத் தாண்ட உதவுவதும் - அறுமுகன் அருளிய பெருத்த வசனமே.

எருக்க மலரையும், கொன்றை மலரையும் முடியிற் சூடும் இறைவனாகிய சிவபெருமான் (குரு) "எமக்குக் குருமூர்த்தி", (எமக்கும் இறையவன்) "எமக்கும் தலைவன்" (என) இந்த அறுமுக ஒருத்தனாகிய இவனே - என்று மதிக்க வைக்கத் தக்க உபதேச மொழியாய் விளங்குவதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

நல்வினை, தீவினை என்னும் இரண்டு வகை வினைகளால் திரட்டப்பட்ட - யாக்கப்பட்ட, மலங்களுக்கு இடமாம் இவ்வுடலின் (இணக்கம்) சம்பந்தம் நீங்குதற்கு. ஒரு (கணக்கை) சூழ்ச்சி நிலையை / தந்திரத்தை அருளுவதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

இருக்கு முதலிய சமஸ்த கலைகளும்
இதற்கு இது எதிரென இணைக்க அரியதும்

இறக்க எனது எதிர் நடக்கும் யமபடா
கடக்க விடுவதோர் இயற்கை அருள்வதும்

<u>ரஞ்சனி</u>

நெருக்குவன உபநிடத்தின் இறுதிகள்
நிரப்பு கடையினில் இருப்பை உடையதும்

நெருப்பு நிலம் வெளி மருத்து வனம் என
நிறைத்த நெறிமுறை கரக்கும் உருவமும்

நினைப்பு நினைவது நினைப்பவனும் அறு
நிலத்தில் நிலை பெற நிறுத்த உரியதும்

(21)

ரிக் வேதம் முதலிய சகல கலைகளும் (இதற்கு இது) அறுமுகன் அருளிய இந்தப் பெருத்த வசனத்துக்கு (எதிரெண) ஒப்பாகும் என்று இணை சொல்ல முடியாததும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

நான் இறக்கும் பொழுது என் முன்னே வந்து நிற்கும் யம தூதர்களை வென்று விலக்க வல்லதான ஒரு நிலைமையை (மனோதிட வலிமையை) அருள்வதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

(நெருக்குவன) நிறைவான நிரம்பப் பொருள்களை எடுத்துச் சொல்வதான உபநிஷத்துக்களின் (வேதத்தின் ஞான காண்டங்கள்) இறுதிகள்: முடிவான பொருள்கள் (நிரப்பு கடையினில்) முடிவு கட்டும் முடிவில்– பூரண பக்குவ நிலையில் (இருப்பை உடையதும்) தனது இருப்பிடமாகக் கொண்டு விளங்குவதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

தீ, மண், ஆகாயம், (மருத்து) காற்று (வனம்) நீர் என்று பஞ்ச பூதங்கள் என்று –(நிறைத்த) நிறைவு பெறுவதான – பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் வகுக்கப்பட்ட ஒரு தத்துவ விதிமுறைக்கு (கரக்கும்) அகப்படாமல் ஒளித்துக் கொள்ள வல்ல– அப்பாற்பட்ட ஓர் உருவப் பொருளும் (அவ்) ஒரு வடிவமான வஸ்துவைத் தரிசிக்கச் செய்வதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

நினைவும் (அறிவும்), நினைக்கப்படும் பொருளும், நினைப்பவன (அறிபவன்) என்னும் மூவகையும் (திரிபுடிகளும்) அறு – அற்றுப்போன (அற்ற) இடத்தில் நிலை பெற்று நிற்கும்படி, நிறுத்த வல்ல ஆற்றலை உடையதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

நிலைத்த அடியவர் மலைத்தல் அது கெட
நிவிர்த்தியுற அநுபவிக்கு நிதியமும்

<u>வசந்தா</u>

உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர
உளத்தொடு உரை செயல் ஒளித்து விடுவதும்

ஒளிக்கும் ஒளியென, வெளிக்கும் வெளியென
உயிர்க்கும் உயிரென நிகழ்ச்சி தருவதும்

உரத்த தனிமயில் உகைத்து, நிசிசரர்
ஒளிக்க, அமர் பொரு சமர்த்தன், அணிதழை
உடுத்த, குறமகள் மணக்கும் அறுமுகன்
ஒருத்தன் அருளிய பெருத்த வசனமே

பக்தி நெறியில் மனம் நிலைத்து நிற்கும் அடியவர்கள், பிரபஞ்ச விஷயங்களில் பிரமித்தல் என்பது கெட்டொழியவும் (நிவிர்த்தியுற) அவைகளின் சிக்கினின்றும் விடுதலை பெறவும், உதவுகின்ற அநுபவநிலையைத் தரும் (நிதியமும்) செல்வப் பொருளும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

உள்ளத்தை உருக்கும் திருவருளில் (திளைத்து) அனுபவித்து. களிப்பு நிலையில் இருக்க, மனம், வாக்கு, காயம் இம்மூன்றின் தொழிலையும் அற்றுப் போகும்படி செய்வதும் (- - - பெருத்த வசனமே)

உலகிற்கு ஒளி தரும் சூரியன், சந்திரன், அக்னி, தாரகைகள் முதலியவற்றுக்கெல்லாம் மூல ஒளியாய்த் திகழ்வதும், வெட்ட வெளியைத் தாண்டிய பரவெளியாய்த் திகழ்வதும், சகலத்திலும் உயிராய்த் திகழ்வது என்னும்படி (நிகழ்ச்சி) செயல் புரிந்து விளக்கம் தருவதும் (அறுமுகன் அருளிய பெருத்த வசனமே)

வலிய (தனி) ஒப்பற்ற மயிலை செலுத்தி, அசுரர்கள் ஒளிந்து ஓட, போர் புரிந்த சாமர்த்தியம் வாய்ந்தவனும், (அணி) அழகிய தழைகளை ஆடையாகக் கொண்ட குறமகள் வள்ளியை மணந்த ஆறுமுகப் பெருமானாகிய, ஒப்பற்ற பிரான், எனக்கு உபதேசித்து அருளிய பெருமை வாய்ந்த உபதேச மொழியே.

உதர கமலத்தினிடை முதிய புவனத்ரயமும்
உக முடிவில் வைக்கும் உமையாள் பெற்ற பாலகனும்

உமிழ் திரை பரப்பி வரு, வெகு முக குலப் பழைய
உதக மகள் பக்கல் வரு சோதிச் சடானனும்

உவகையொடு கிர்த்திகையர் அறுவரும் எடுக்க, அவர்
ஒருவர் ஒருவர்க்கு, அவண் ஓர் ஓர் புத்ரன் ஆனவனும்

உதய ரவி வர்க்க நிகர், வன கிரண விர்த்த, விதம்
உடைய, சதபத்ர, நவ பீடத்து வாழ்பவனும்

உறை, சரவணக் கடவுள், மடுவில் அடர் வஜ்ர தர
னுடைய, மத வெறுப்பு, உலைய வேதித்த வீரியனும்

உரை பெற வகுத்து, அருணை நகரின் ஒரு பத்தனிடும்,
ஒளிவளர் திருப்புகழ் மதாணி க்ருபாகரனும்

வேடிச்சி காவலன் வகுப்பு (23)

திருவயிறாகிய தாமரையிடத்தே, பழமையான மூவுலகங்களையும் யுகம் முடியும் காலத்தில் அடக்கி வைத்துக் காப்பாற்றும் உமா தேவி பெற்ற பாலகனும் (வேடிச்சி காவலனே)

வெளி வீசும் அலைகளைப் பெருக்கி வருகின்றதும், பல முகமாகப் பரந்து ஆடும்வதுமான, சிறப்பு வாய்ந்த, பழைய, நீர் மகளாம் கங்கையின் இடத்தே அவதரித்தருளின ஒளி வீசும் ஷண்முகனும் (... காவலனே)

மனமகிழ்ச்சியுடன் கிர்த்திகை மாதர் ஆறு பேரும் எடுக்க விரும்ப, அவர்கள் ஒவ்வொருவருக்கும் (அவண்) அவ்விடத்தே, ஒரு ஒரு குழந்தையாய் ஆனவனும் (வேடிச்சி காவலனே)

உதயமாகின்ற சூரியர்களின் கூட்டத்தை நிகர்க்கும். (வனம்) அழகு வாய்ந்ததும். (கிரணம்) ஒளி. (விர்த்தம்) ஒன்றோடொன்று முரண் பட்ட (நிறங்களை) (விதம் உடைய) விதம் விதமாகக் கொண்டதுமான (சதபத்ரம்) மயிலாகிய, புதுமை வாய்ந்த ஆசனத்திலே வீற்றிருப்பவனும்

சரவண மடுவில் (உறை) வளர்ந்த கடவுளாம் முருகனை, (அடர்) நெருங்கிப் பொருத, வஜ்ராயுதம் ஏந்திய இந்திரனுடைய, மதம் கொண்ட மலையன்ன ஐராவதம் (உலைய) அழியும்படி (வேதித்த) நலிவித்த வீரனும்...

(முருகன்) புகழ் விளங்கும் வகையில் (வகுத்து) அவனது சீர்பாதச் சிறப்பு ஆகியவற்றை வகைப்படுத்திச் சொல்லி, அருணைநகர் வாசியாகிய ஒரு பக்தனாகிய அடியேன் (இடும்) அணிவித்த, புகழ் பெருகு திருப்புகழ் எனப் பெயர் கொண்ட (மதாணி) பதக்கத்தை ஏற்று அணிந்துள்ள கருணை மூர்த்தியும் (வேடிச்சி காவலனே)

உரக கண, சித்த கண. கருட கண யக்ஷகணம்
உபநிடம் உரைத்தபடி பூசிக்கும் வானவனும்

ஒருவனும் மகிழ்ச்சி தரு குருபரனும், உத்தமனும்,
உபயம் உறும் அக்நி கர மீதிற ப்ரபாகரனும்

அதி மதுர சித்ர கவி நிருபனும். அகத்தியனும்
அடிதொழ தமிழ்த்ரய விநோதக் கலாதரனும்

அவரை பொரி எட் பயறு துவரை அவல் சர்க்கரையொடு
அமுது செயும் விக்நபதி யானைச் சகோதரனும்

அவுணர் படை கெட்டு முது மகர சல வட்டம் உடன்
அபயம் இட விற்படை கொடு ஆயத்தம் ஆனவனும்

அருணையில், இடைக்கழியில், உரககிரியிற், புவியில்
அழகிய செருத்தணியில் வாழ் கற்ப காடவியில்

நாகலோக கணத்தவரொடு. சித்தர் கூட்டமும். (பதினென் கணத்தவர்களுள் ஒருவராகிய) கருடர்களும். குபேரன் முதலாய யக்ஷர் கூட்டமும், உபநிஷத்தில் சொல்லியுள்ள முறைப்படி பூசிக்கின்ற தேவாதி தேவனும் (வேடிச்சி காவலனே)

ஒப்பற்ற பரப்ரம்ம பொருளும், தான் செய்யும் ஞானோபதேசத்தால் களிப்பூட்டுகின்ற குருபரமூர்த்தியும், உத்தம மூர்த்தியும். (அக்நி உறு உபய கர மீதில்) அக்கினி தேவனுக்கு உள்ள இரண்டு கரங்களிலும் தாங்கப்பட்டு விளங்கினவனை (ப்ரபாகரனும்) பேரொளி கொண்ட மூர்த்தியும் (வேடிச்சி காவலனே)

மிக மதுரமான, இனிமையான, சித்ர கவி பாட வல்ல கவிராஜனும் (எழுகூற்றிருக்கை. ஏகபாதம், மாலைமாற்று முதலிய சித்ர கவிகளை ஞானசம்பந்தராக பாடி அருளிய கவிராஜனும்) அகத்திய முநிவரே வணங்குகின்ற முத்தமிழ் விநோதக் கலை வல்லவனும்

அவரை. பொரி. எள். பயறு. துவரை. அவல், சர்க்கரை இவைகளுடன் அமுது உண்கின்ற விக்கினராஜன் எனப்படும் கணபதியின் சகோதரனும் (வேடிச்சி காவலனே)

அவுணர் சேனை எல்லாம் கெட்டு. பழையதும் மீன் உலவும் கடல் வட்டத்துடன் அடைக்கலமெனக் கூச்சலிட்டு அலற, விற்படையை ஏந்தி போருக்குத் தயாராக நின்றவனும் (வேடிச்சி காவலனே)

திருவண்ணாமலையிலும், திரு இடைக்கழியிலும், திருச்செங்கோட்டிலும், இப்பூமியில் அழகிய திருத்தணிகையிலும், தன்னால் வாழ்விக்கப்பட்ட தேவர்களின் ஊராகிய கற்பகத் தோப்புள்ள அமராவதியிலும்

அறிவும், அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்,
அறி என இமைப்பொழுதின் வாழ்வித்த வேதியனும்

அரி பிரமருக்கு முதல் அரிய பரமற்கு உயரும்
அரு மறை முடிப்பை உபதேசித்த தேசிகனும்

அமலனும், எனக்கு அரசும், அதிகுணனும் நிர்குணனும்
அகில புவனத்து அமர சேனைக்கு நாயகனும்

அநுபவனும். அற்புதனும். அநுகுணனும், அகரனும்
அருமனம் ஒழிக்கும் அநுபூதிச் சுகோதயனும்

இதம் அகிதம் விட்டு (உ)ருகி, இரவு பகல் அற்ற இடம்
எனது அற இருக்கை புரி யோகப் புராதனனும்

அறிவு இன்னதென்பதையும், அந்த அறிவை அறிய வல்ல தத்துவத்தையும் – மெய்யறிவு - உண்மை ஞானத்தையும், கணக்கற்ற (எல்லையில்லாத) கலைகளையும், அறிந்து கொள் என்று இமைப்பொழுதில் - ஒரு நொடியிலே அடியேனுக்கு அறிவித்து, அடியேனை வாழ்வித்த மறையோனாகிய கடவுளும் (வேடிச்சி காவலனே)

திருமாலுக்கும் பிரமனுக்கும், (முதல்) முன்பு, அறிதற்கு அரியராய் திகழ்ந்த சிவபிரானுக்கு, உயர்ந்த - மேலான அரிய வேதங்களின் மறை பொருளை உபதேசம் செய்த (தேசிகன்) குருமூர்த்தியும்

மலம் அற்றவனும், எனக்கு இறைவனும், மேலான குணம் உள்ளவனும், குணம் அற்றவனும்/குணம் கடந்தவனும், சகல அண்டங்களிலும் உள்ள தேவசேனைகளுக்குத் தலைவன் ஆனவனும் (- · ·)

சகல நுகர்ச்சிகளுக்கும் மூல காரணமாய் இருப்பவனும், அற்புத மூர்த்தியும், (அநுகுணனும்) சகலத்துக்கும் தகுதியுள்ளவனும், எழுத்துக்களுக்கு மூலப்பொருளானவனும் - பிரணவ மூர்த்தியும் - அருமை வாய்ந்த மனத்தை அழிக்க வல்ல - மனத்தை ஒடுக்க வல்ல - மேலையும் தரவல்ல (அநுபூதி) அநுபவ ஞான சுகத்தில் கிடைப்பவனும் (சுகோதயன்) சுக தோற்றத்தில் விளங்குபவனும்/ சுகம் தோன்றுவதற்கு இருப்பிடமானவனும் (Fountain of Happiness) அனந்த வந்து-

இன்ப துன்பங்களை ஒழித்து விலக்கி, (உருகி) இறைவன் திருவருளை நினைந்து உருகி, (இரவு பகல்) கேவல சகலங்கள் கடந்த நிலையை - இன்ப வெளியை (எனது அற) மமகாரம் நீங்க (இருக்கை) நிலையிடமாக (புரி) எனக்கு அருளின சிவயோக முன்னவனும் (வேடிச்சி காவலனே)

[இரவு-பகல்: ஆன்மா செயலற்று கிடந்து உழலும் நிலை/ தேகமெடுத்து பிறப்பு இறப்புக்கு உட்படும் நிலை]

எனது மனதிற், பரம சுக மவுன, கட்க மதை
யமன் முடி துணிக்க விதியா வைத்த பூபதியும்

எழுமையும் எனைத் தனது கழல் பரவு பத்த னென
இனிது கவி அப்படி ப்ரசாதித்த பாவலனும்

இமையவர் முடித்தொகையும், வனசரர் பொருப்பும், எனது
இதயமு மணக்கும் இரு பாதச் சரோருகனும்

எழுத அரிய, கற்பதரு நிழலில் வளர் தத்தை, தழுவிய,
கடக வஜ்ர அதிபாரப் புயாசலனும்

எதிர் இல் புலவர்க்கு உதவு, வெளி முகடு முட்ட வளர்
இவுளி முகியைப் பொருத ராவுத்தன் ஆனவனும்

எழுபரி ரதத்து இரவி (எழு) நிலவொடு அக்கரிகள்
இடர்பட முழக்கி எழு சேவற் பதாகையனும்

என்னுடைய உள்ளத்தில், பரம சுக மௌனம் என்னும் (கட்க
மதை) வாளை, யமனுடைய முடியைத் துணிக்க வல்ல (விதியாக)
பாக்கியப் பொருளாக வைத்து அருளின அரசும் (வேடிச்சி காவலனே)
ஏழு வகை பிறப்பிலும், என்னைத், தனது திருவடிகளைத் துதிக்கும் (பரவும்:
போற்றுகின்ற) பக்தன் என ஏற்றுக் கொண்டு, இனிமையான
முறையில் பாடல்களைப் பாடும் திறனை (அப்படி) அற்புதமான வகையில்
தந்தருளின கவி ராஜனும் (வேடிச்சி காவலனே)
தேவர்களின் முடிக்கூட்டங்களின் மீதும். (வனசரர்) வேடர்களின்
(பொருப்பும்) மலையாகிய வள்ளிமலையிலும், என்னுடைய உள்ளத்
திலும் நறுமணம் கமழும். இரண்டு திருவடித் தாமரைகளை
உடையவனும் (வேடிச்சி காவலனே)
எழுதுவதற்கு முடியாத அழகுடையவளும், கற்பக விருக்ஷங்களின்
நிழலிலே வளர்ந்தவளுமான (தத்தை) கிளி போன்ற தேவசேனை
தழுவினதும், (கடகம்) வீரவளை அணிந்ததும், வைரம் போலத்
திண்மை கொண்டதுமான, அதிபாரமான- கனத்த-(புய அசலனும்)
புய மலையைக் கொண்டவனும் (வேடிச்சி காவலனே)
தனக்கு நிகரில்லாத பெரும் புலவர் நக்கீரருக்கு உதவும் பொருட்டு
ஆகாய உச்சி முட்டும் அளவுக்கு வளர்ந்திருந்த இவுளிமுகி- கற்கி
முகி என்னும் பூதத்துடன் சண்டை செய்தவனுமான போர்
வீரன் ஆனவனும் (வேடிச்சி காவலனே)
எழுகுதிரைகளைப் பூட்டிய தேரைக் கொண்ட சூரியன் எழுந்து உலவுகின்ற
ஏழு புவனங்களுடன், திக்கஜங்கள் எட்டும், துன்புறும்படி ஒலி செய்து
எழுகின்ற சேவலைக் கொடியாக உடையவனும் (வேடிச்சி) காவலனே)

இணையிலியும் நிர்ப்பயனும் மலமிலியும் நிஷ்களனும்
இளையவனும் விப்ரகுல யாகச் சபாபதியும்

மதுகையொடு,சக்ரகிரி முதுகு நெளியப், புவியை
வளைய வரும் விக்ரம கலாபச் சிகாவலனும்
வலிய நிகளத்திடை,மறுகு,சிறை பட்டொழிய
வனஜ முனியைச் சிறிது கோபித்த காவலனும்

வருசுரர் மதிக்க ஒரு குருகு பெயர் பெற்ற,கன
வடசிகரி பட்டுருவ வேல் தொட்ட சேவகனும்

வரதனும்,அநுக்ரகனும்,நிருதர் குல நிஷ்டுரனும்
மதுபவன சித்தனும் மநோ துக்க பேதகனும்

வயிர்,இசை முழக்கம் மிகு, மழை தவழ், குறிச்சி தொறும்
மகிழ் குரவையுள் திரியும் வேடிக்கை வேடுவனும்

மரகத மணிப் பணியின் அணிதழை உடுத்து (உ)லவும்
வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகனும்

தனக்கு நிகரில்லாதவனும், பயம் இல்லாதவனும், மும்மலங்கள் இல்லாதவனும், உருவம் இல்லாதவனும், என்றும் இளையவனும் வேதியர்கள் செய்யும் யாகங்களுக்கு சபாநாயகனும் (.. காவலனே)

வலிமையுடன், சக்ரவாளகிரியின் பக்கவாட்டங்கள் வளைந்து குலையும் படி, பூமியை சுற்றி வந்த பராக்ரமம் பொருந்திய தோகை மயிலோனும் வலிமை வாய்ந்த விலங்கினால், மனக்கலக்கம் தரும் சிறையில் அகப்பட்டுத் தனித்திருக்கும்படி, தாமரை மலரோன் பிரமனைக் கொஞ்சம் கோபித்த தலைவனும் (வேடிச்சி காவலனே)

உடன் வந்த தேவர்கள் மதித்துப் போற்ற, (ஒரு) ஒப்பற்ற (குருகு பெயர்) கிரௌஞ்சம் என்னும் பெயர் பெற்ற பொன்மயமாய் வடக்கே இருந்த மலையின் மேல் பட்டு ஊடுருவும்படி, வேலாயுதத்தைப் பிரயோகித்த பராக்ரமசாலியாகிய பெருமானும் (வேடிச்சி காவலனே)

வரம் அளிப்பவனும், அருள் பாலிப்பவனும், அசுரர் குலத்துக்கு இடையூறு- கொடுமை செய்தவனும், (மது) மந்திரங்களை, (பவனம்) இருப்பிடமாகக் கொண்ட சித்த மூர்த்தியும், மனத்துத் துக்கங்களை வேதனைகளை, பேதிப்பவன்-மாற்றுபவனும், ஒழிப்பவனும் (...)

(வயிர்) ஊது கொம்புகளின், ஒலி முழக்கம் மிகுந்துள்ளதும், (மழை) மேகம் தவழ்கின்றதுமான, மலைநில ஊர்கள் தோறும் மகிழ்ந்து கொண்டாடப்படும் (குரவையுள்) வேடுவர்கள் ஆடும் குரவைக்கூத்து நடக்கும் இடங்களில் திரிகின்ற விநோத வேடனும் (.... காவலனே)

பச்சை மணி முதலிய (பணியின்) ஆபரணங்களுடன், அழகிய தழைதனால் ஆய உடையை அணிந்து உலவின வேடுவர் மகளை "என்னை மணந்து கொள்" என்று யாசித்த யாசகனும் (வேடிச்சி காவலனே)

(28)

மதனன் விடு புட்பசர படலம் உடல் அத்தனையும்
மடல் எழுதி நிற்கும் அதிமோகத் தபோதனனும்

வரிசிலை மலைக் குறவர் பரவிய புனத்து இதணில்
மயில் என இருக்கும் உரு வேடிச்சி காவலனே.

(28) மன்மதன் பிரயோகித்த மலர் பாணங்களின் தொகுதி, தனது உடல் முழுதும் பாய்ந்து புண்படுத்தி இருக்கும் நிலையை படத்திலே எழுதிக் காட்டி நிற்கின்ற அதிக தெய்வீகக் காதல் மிக்க தவசீலனும் (வேடிச்சி காவலனே)

கட்டப்பட்ட வில்லை உடைய, மலை வேட்டுவர், பூஜை போட்டு வழிபடும் தினைப்புனத்து பரண் மீதில் மயிலின் சாயலுடனே இருந்த (உரு) ஒப்பற்ற குறத்தி வள்ளிக்கு வேளைக்காரனைக் காவல் காத்த அந்த அறுமுகவேள் தான்.

சேவகன் வகுப்பு

(7) இரு பிறை எயிறு நிலவெழ, உடலம்
இருள் படு சொரூபம் உடைக்கோ விடவே

இறுகிய கயிறு பட, வினை முடுகி,
எமபடர் பிடரி பிடித்தே கொடுபோய்

அரு மறை முறையின் முறை முறை கருதி
அதரிடை வெருவ உறுத்தால், வகையால்

அறிவொடு மதுர மொழியது கூறி
அலமரு பொழுதில் அழைத்தால் வருவாய்

சேவகன் வகுப்பு

இரண்டு பிறைகள் போன்ற (எயிறு) பற்கள் நிலவொளி வீச, உடல் இருள் நிறம் விளங்கும் உருவம் கொண்ட தலைவன்- யமன் - அனுப்பிக்க வந்து

அழுத்தமாகக் கட்டும் பாசக்கயிறு வந்து பிணிக்க, வினை வேகமாய் வந்து மூட, எமதூதர்கள் எனது கழுத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்

அரிய வேதங்களிற் சொல்லியுள்ள விதிப்படி (செய்த வினைகளைத் தனித்தனி முறைப்படி சீர்தூக்கிக் கருதி (அதர் இடை) கொண்டு போகும் வழியில் (வெருவ) பயப்படும்படி வருத்தித் தண்டித்தால், (வகையால்) நல்ல வகையில்

அறிவுடனே, இனிமையான சொற்களால், தடுமாற்றக் கூச்சலிட்டு நான் வேதனைப்படும் பொழுது (உன்னை நான்) அழைத்தால் (நீ) வந்தருளுவாயாக.

ஒருபது சிரமும் இருபது கரமும்
விழ, ஒரு பகழி தொடுத்தோன் மருகா
உரமது பெரிய திரிபுரம் எரிய
உயர் கன கிரியை வளைத்தோர் புதல்வா
மரு வளர் அடவி வனிதையர், பரவ
மரகத இதணில் இருப்பாள் கணவா
வளர் கடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத முழுச் சேவகனே.

(29)

இராவணனது ஒப்பற்ற பத்துத் தலைகளும், இருபது கைகளும் அற்று விழும்படி ஓர் அம்பைப் பிரயோகித்த (திருமாலின்) மருகனே.

வலிமை மிக்குடைய திரிபுரங்கள் எரிந்து விழப், பெரிய பொன் மலையாம் மேருவை (வில்லாக) வளைத்த சிவபெருமானது புதல்வனே.

நறுமணம் ஓங்கும், வன தேவதைகள், (பரவ) போற்றித் துதிக்க பசுமை வாய்ந்த பரண் மீதே இருந்த வள்ளியின் கணவனே.

வளர்ந்த கடல் இரைச்சல் இட, அசுரர்கள் இறக்க, (கிரௌஞ்சம், எழுகிரி ஆகிய) மலைகளுடன் சண்டை செய்த முழு வீரனே.

(சேவகன் = பராக்ரம சாலி)

(8) யமுனா கல்யாணி. புய வகுப்பு

வசை தவிர், ககன சர, சிவ கரண, மகா வ்ருத
சீல, சால வர, முநி சித்தரை
அஞ்சல் அஞ்சல் என்று வாழ்வித்து நின்றன

மணிவட, மழலை உடை மணி, தபனிய நாண், அழ
காக நாடி வகை வகை கட்டு,
மருங்குடன் பொருந்து ரீதிக்கு இசைந்தன

வருணித கிரண, அருணித, மிகு, தருண ஆதப,
சோதி ஆடை வடிவு பெறப் புனை
திண் செழும் குறங்கின் மேல் வைத்து அசைந்தன

புய வகுப்பு

குற்றம், பழிச்சொல் (தவிர்) நீக்கின- இல்லாத, (ககன சர) ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்க வல்ல, சிவ தியானம் நிறைந்த, மகா விரத சீலர்களும், (சால வர) நிரம்பின வரங்களைப் பெற்றவர்களும், முநிவர்களாம் சித்த புருஷர்களை "பயப்படாதீர்கள், பயப்படாதீர்கள்" என்று வாழ்வு தந்து நிலைத்து நின்றன (வாகைப் புயங்களே)

ரத்ன சரம், (மழலை) மெல்லோசை செய்யும் அரையணி (தபனிய) பொன் அரை நாண் இவைகளை இவைகளை அழகாக (நாடி) விரும்பி இவை வகை வகையாகக் கட்டியுள்ள (மருங்குடன்) இடையில் சேரும் முறைக்கு ஒத்து விளங்கின (வாகைப் புயங்கள்)

வருணிக்கத் தக்க, ஒளி வீசும், (அருணித) செந்நிறத்ததான, மிக்க, (தருண ஆதப) இளஞ் சூரியனுடைய, ஒளியைக் கொண்ட உடையை, (வடிவு பெற) அழகு பெற (புனை) அணிந்துள்ள, திண்ணிய – வலிமை

வளை கடல் உலகை, வலம் வரு. பவுரி. வினோத
கலாப, கோப, மயில் வதனத்து
விளங்கும் அங்குசம் கடாவிச் சிறந்தன

வரை பக. நிருதர்முடி பக, மகர மகோததி.
தீயின் வாயின் மறுக, விதிர்த்து. அயில்
வென்றி தங்கு துங்க வேலைப் புனைந்தன

மதி என, உதய ரவி என, வளைபடு, தோல்,
விசால நீலமலி பரிசைப்படை
கொண்டு நின்று உழன்று சாதிக்க முந்தின

மனகுண சவன(ம்) மலினம் இல் துரிய அதீத
சுகாநுபூதி மவுன நிராதர
மந்திரம் பொருந்தி மார்பில் திகழ்ந்தன

மிக்க. (செழும்) செழுமை வாய்ந்த. (குறங்கின் மேல்) தொடையின் மேல் வைக்கப்பட்டு அசைந்தன (வாகைப் புயங்கள்)

கடல் (வளை) சூழ்ந்த உலகை, வலமாக (பவுரி) மண்டலமிட்டு வந்த வியக்கத்தக்க (கலாபம்) தோகை நிறைந்த, (கோப) உக்ரமான மயிலின் முகத்திலே (விளங்கும்) ஒளி வீசும் (அங்குசம்) யானைத்தோட்டி போன்ற ஆயுதத்தை (கடாவி) செலுத்தி, மேம்பட்டு விளங்கின (வாகைப் புயங்களே)

கிரவுஞ்சம், ஏழுகிரி இவை பிளவு பட, அசுரர்களின் முடிகள் சிதறுண்டு விழ, மகர மீன்கள் நிறைந்துள்ள பெருங்கடல், நெருப்பிடையே கலங்க, (விதிர்த்து) (வேலை) அசைத்து. (அயில்) கூர்மையும், வெற்றியும், (தங்கு) என்றும் நிலைத்துள்ள, (துங்க) பரிசுத்தமான வேலாயுதத்தைப் (புனைந்தன) அலங்காரமாக- அழகாக - ஏந்தி நின்றன (வாகைப் புயங்களே)

நிலவு போலவும், உதய சூரியன் போலவும், வளைந்து வட்ட வடிவுடன், தோல் புனைந்ததாய், அகன்றுள்ளதாய் (நீலமலி) கருநிறம் நிறைந்ததாயுள்ள (பரிசைப்படை) கேடயம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு - ஏந்தி நின்று, அதை (உழன்று) சுழற்றிச் சுழற்றி (சாதிக்க) வெற்றியை அடைய முற்பட்டு விளங்கின.

(மன சவனம், குண சவனம்) மனம், குணம் ஒரு நிலைபடாது நிலையற்றிருத்தல், (மலினம்) மாசு (அல்லது) பாவம், இவை இல்லாததும், துரிய நிலைக்கு மேற்பட்டதும், (யோகியர்கள் தன் மயமாய் நிற்கும் நான்காவது நிலைக்கும் மேற்பட்ட துரியாதீதமாகிய) சுகாநுபூதி இன்பமே பயக்கும் அனுபவ ஞானமுமான (மவுன மந்திரம். நிராதர மந்திரம்) சும்ப

வகை வகை குழுமி மொகு மொகு மொகென அநேக
சமுக ராக மதுபம் விழச், சிறு
சண்பகம், செறிந்த தாரிற் பொலிந்தன

ஹமீர் கல்யாணி

திசை திசை கருவி, வெளி புகடு அளவு, நிசாசர
சேனை, தேடி, விததி பெறச் சில
கங்கணம் கறங்க மீதிற் சுழன்றன

வெருவுவ வெருவ, எரி சொரி விழியுள, பூத
பிசாசு, போத, மிகு தொனி பற்றி
முழங்கு விஞ்சு கண்டை வாசிக்கை கொண்டன.

விதமிகு, பரத, சுர வனிதையர் கண, மேல் தொறும்,
விளையாக, விமல சலத்தினை,
விண் திறந்து கொண்டு வீசிப் பொலிந்தன

இருத்தல் என்னும் மந்திரம், அசுரங்களோடு கூடாததான — எழுத்துக
கணக்குக்கு அப்பாற்பட்டதான — மந்திரம் (பொருந்தி) அத்தகைய
மௌன மந்திர நிலையினில் பொருந்தியதாய் மார்பிலே சின் முத்தி
ரையுடன் விளங்கின. (வாகைப் புயங்களே)

கூட்டம் கூட்டமாகக் கூடி. மொகு மொகு மொகு என்ற ஒலியுடன்,
அநேக (சமுக) திரளான ராகங்களைப் பாடுகின்ற (மதுபம்) வண்டு
கள், விரும்பி வந்து மேலே விழச் (சிறுசண்பகம்) சாதி மல்லிகைப்
பூ (செறிந்த) நெருங்கிக் கட்டப்பட்ட (தாரில்) மாலை மீது விளங்கின.

மேன் மேலும் கோபித்து, ஆகாய உச்சி அளவும். அசுரர் சேனைகளைத்
(தேடி) இருக்கும் இடமெல்லாம் தேடிப்பிடித்து (விததி பெற) அவர்கள்
பரவி இருந்த இடங்கள் அனைத்தையும் சிதறி அடிக்க (சில கங்கணம்)
தொடி — வீரவளை — தோள் அணி (கறங்க) ஒலிக்க மேலே சுழன்றன.

மற்றவர்கள் பயந்து ஒதுங்கும் துஷ்ட மிருகங்களும் பயப்படும்படியும்,
தீயைக் கக்குகின்ற விழிகள் உள்ள பூதங்களும் பிசாசுகளும்
(போத) ஓடிப்போகும்படி, அதிக சப்தத்தைக் கொண்டு (முழங்கு
விஞ்சு) ஒலித்தல் மிகுந்துள்ள (கண்டை) கண்டா மணியை
(வாசிக்கை) ஓசைப் படுத்தலை மேற்கொண்டன (வாகைப் புயங்களே)

பல விதமான, பரத நாட்டியத்தில் வல்ல, தேவ மங்கையர்களின்
கூட்டத்தில், ஒவ்வொருவரின் மேலேயும், விளையாட்டாக, (விமல)
பரிசுத்தமான நீரை, ஆகாயத்தில் திறந்து வழிகண்டு (ஆகாச
கங்கையினின்றும்) கொண்டு. வீசுவதாய் விளங்கின (வாகைப்
புயங்களே)

விதரண தருவின், மலரிடை செருகிய கூதள
நீபமாலை, விபுதர் குலக்
குலிசன் பயந்த, செங்கை யானைக்கு இசைந்தன

கொடையிற் சிறந்த கற்பக விருக்ஷத்தின் மலர்கள், இடையிடையே செருகப்பட்ட (கூதள) கடப்ப மாலை இவைகளை, தேவர் குலத்து குலிசாயுதனை இந்திரன் (பயந்த) பெற்ற. சிவந்த கைகளை உடைய. தேவசேனைக்குச் சூட்டுவதற்கு உடன் பட்டன (வாகைப் புயங்களே)

விகசித, தமர, பரிபுர, முளரி, தொழா அபிராம
வேடர் விமல தினைப்புன
மங்கை, கொங்கை கண்டு வேளைப் புகுந்தன

மலர்ந்துள்ளதும். (தமரம்) ஒலி செய்கின்ற (பரிபுரம்) பாதகிங்கிணி அணிந்ததுமான (முளரி) தாமரையன்ன திருவடிகளைத் (தொழா) தொழுது, அழகு வாய்ந்த வேடர்களின் பரிசுத்தமான (மங்கை) பெண் (தினைப்புன மங்கை) தினைப்புனத்திலிருந்த பெண் ஆகிய வள்ளியின் கொங்கைகளைத் தரிசித்து வணங்க (அவளின் பக்குவ நிலையை அறிய) வேளைப் புகுந்தன – சமயம் அறிந்து சென்றன – தழுவுவதற்கு (வாகைப் புயங்களே)

விதிர் தரு சமர, முறி கர கமல, நகாயுத
கோழி வீற, விதரண சித்ர
அலங்கிருதம் புனைந்து பூரித்து இலங்கின

(விதிர் தரு சமர) நடுங்கச் செய்யும் போரில். (முறி) பகைவர்களை முறியடித்து அழிக்க வல்ல. (கர கமலம்) முருகனது கரங்களாம் தாமரையில், (நக ஆயுத) தனது கால் நகங்களையே ஆயுதமாகக் கொண்டு போர் செய்ய வல்ல கோழிக் கொடி (வீற) மேம்பட்டு விளங்க, (விதரண) கொடையிற் சிறந்த, (சித்ர) அழகிய. அலங்காரத்தைப் புனைந்ததாய் (பூரித்து) நிறைவு காட்டி – கம்பீரத்துடன் விளங்கின (வாகைப் புயங்களே)

விரகுடை எனது மனதுடன் அகில் பனி நீர், புழுகு
கோடளாவி மிருகமத கர்ப்புர
குங்குமங் கலந்து பூசித் துதைந்தன

மிக்க கபடம் என் மனதை (தன் வசமாக்கி) அதனுடன் அகில், பன்னீர், புனுகு சட்டம் இவைகளையும் (அளாவி) கலந்து, கஸ்தூரி, பச்சை கற்பூரம், குங்குமப் பூ – இவைதமையும் கலந்து (அக்கலவையை) பூசிக் கொண்டு பிரகாசித்தன (வாகைப் புயங்களே)

விண புரி பவனி தொழுது, அழுது உருகிய கோதையர்
தூது போக விடும், மது பஷண
வண்டு இனம் திரண்டு — சூழப் படிந்தன

பூர்வி கல்யாணி

இசை தனில் இனிய கயிசிகை, கவுட, வராளி)
தசி, தேசி, பயிரவி, உச்சரி
பஞ்சுரம் தெரிந்து — வீணைக்கு இசைந்தன.

இறுதில், உதய ரவிகண நிகர் என, ஆறிரு
காது தோயும் இலகு மணிக் கன
விம்ப குண்டலங்கள் — மேவிப் புரண்டன.

எதிர்படு நெடிய தரு அடு பெரிய கடாம் உமிழ்
நாக மேகம் இடிபட மற்பொரு
திண் சிலம்பு அடங்க — மோதிப் பிடுங்கின

எழுத அரும் அழகு நிறம் மலி திறல் இசையாக
உதார தீரம் என உரை பெற்ற
அடங்கலும் சிறந்து — சாவத் ததும்பின

(33)

(விணபுரி) தன்னைத் தொழும் மாதர்களின் உள்ளத்திலே விரகப் போரை உண்டாக்கும். (பவனி) உலாக் காட்சியைக் கண்டு தொழுது (வணங்கி), அழுது உருகிய பெண்கள், தூது போகும்படி அனுப்பியுள்ள, மலர்த் தேன் உண்ணும் வண்டுகளின் கூட்டம் (திரண்டு) ஒன்று சேர்ந்து மொய்த்துப் படிய இருந்தன (... புயங்களே)

ராகங்களின் இனிமை தரும் கயிசிகை, கவுட வராளி, தன்யாசி, தேசி, பயிரவி, குச்சரி, பஞ்சுரம் என்பனவற்றின் இலக்கணம் தெரிந்து அவைதமை வீணைக்குப் பொருந்த வாசிப்பன (....)

முடிவு இல்லாததாய் (ஒளி நிலை பெற்றதான) உதய சூரியர்களின் கூட்டத்தை ஒக்கும் என்று சொல்லத் தக்கனவாய், பன்னிரண்டு காதுகளிலும் பொருந்தி (இலகும்) விளங்கும், (மணி) ரத்ன மயமான, (கன) பொன் மயமான (விம்ப) ஒளி வீசுகின்ற குண்டலங்கள் பொருந்திப் புரண்டனவாய் விளங்கின (....)

எதிரில் உள்ள நீண்ட (தரு) மரங்களை, (அடு) அழிக்கும் பெரிய (கடாம்) மதநீரை வெளிவிடும் (நாகம்) (திக்) கஜங்கள் இடி மேகங்கள் போல் ஒன்றோடொன்று மோதிப் பேரொலி செய்ய மற்போர் செய்வித்து வலிமையான (சிலம்பு அடங்க) மலைகள் யாவற்றையும் - அஷ்ட குல கிரிகளையும் மோதிப் பிடுங்கி எறிய வல்லன (வாகைப் புயங்களே)

எழுதுதற்கு இயலாததான அழகும், (நிறமும்) ஒளியும், (மலி) மிகுந்த (திறல்) பராக்கிரமமும் (இசையாக) கீர்த்தி பெற்று விளங்க, தயாள குண வீரம் என்று (உரை) புகழ் பெற்ற, சகல நற்குண விசேடங்களும் (சிறந்து) மேம்பட்டு (சாவ) நிரம்ப மேலோங்கி விளங்கின (வாகைப் புயங்களே)

இருள் பொரு, கிரண, இரணிய, வட, குல பாரிய
மேரு சாதி இனம் என ஒத்து,
உலகங்கள் எங்கணும் ப்ரகாசித்து நின்றன

இயல் முநி பரவ, ஒரு விசை, அரு வரையூடு, அதி
பார கோர இவுளி முகத்தவள்
கொங்கை கொண்ட சண்ட மார்பைப் பிளந்தன

இபரத துரக நிசிசரர் கெட, ஒரு சூரனை
மார்பு பீறி அவன் உதிரப் புனல்
செங்களம் துளங்கி ஆடிச் சிவந்தன

எவை எவை கருதில் அவை அவை தரு கொடையால், மணி,
மேக ராசி, சுரபி, அவற்றொடு
சங்க கஞ்ச பஞ்ச சாலத்தை வென்றன

கல்யாணி
அசைவற நினையும் அவர் பவம் அகலவே, மேல் வரு
கால தூதரை உடையும் அப்படி
அங்கும், இங்கும், எங்கும் ஓடத் துரந்தன

இருளொடு மாறுபட்டு இருளை விலக்கும் (கிரணம்) ஒளியைக் கொண்ட (இரணிய) பொன்மயமானதும், வடக்கே உள்ளதும் (குல) சிறப்புள்ளதும், (பாரிய) பருத்த, மேரு மலைக் கூட்டத்தைச் சார்ந்த வகையைப் போன்று, உலகங்களில் எவ்விடத்திலும் ஒளி வீசி நின்றன. (....)

இயல் தமிழாதிய முத்தமிழ் வல்ல நக்கீரதேவர் (பரவ) திருமுருகாற்றுப்படை என்னும் அருமைப் பாடலை பாடி வணங்க (ஒரு விசை) முன்பொருகால், பெரிய மலையிடத்தே, மிகப் பெரிய கோர உருவமுடைய, குதிரை முகம் கொண்ட 'கற்கிமுகி' என்னும் பூதத்தின் கொங்கைகளைக் கொண்ட (சண்ட) வலிமை வாய்ந்த மார்பைப் பிளந்தன (வாகைப் புயங்களே)

(இபம்) யானை, ரதம், குதிரை ஆகிய படைகளைக் கொண்ட அசுரர் கூட்டம் (கெட) அழிந்து போகும்படி, (ஒரு) ஒப்பற்ற சூரனுடைய மார்பைக் கிழித்து அவனுடைய இரத்த வெள்ளத்தால் செந்நிறம் பூண்ட போர்க்களத்தில் (துளங்கி ஆடி) கலங்கி ஆடுவதால் சிவப்பு நிறத்தை அடைந்தன

எவை எவை வேண்டுமென நினைத்து விரும்பினாலும், அவை அவை தம்மைத் தருகின்ற கொடைச் சிறப்பால், சிந்தாமணியையும், மேகக் கூட்டங்களையும் (சுரபி) காமதேனுவையும், அவற்றொடு சங்க நிதியையும், (கஞ்ச) பதும நிதியையும் (பஞ்ச சாலத்தை) தெய்வ விருக்ஷங்கள் ஐந்தின் கூட்டத்தையும், வென்று மேம்பட்டு விளங்குகின்றன (வாகைப் புயங்களே)

சலனமின்றித் தியானிக்கும் அடியார்களின் பிறப்பு அகலவே (ஒவ்வ) அவர்களைப் பிடிக்க வரும் யமதூதர்களை, சிதறும் வண்ணம், அவர்களை அங்கும், இங்கும் பல திசைகளிலும் ஓடும்படி துரத்தி வெற்றி கொண்டன.

அகிலமும் எனது செயல் அலது இலை என யான் என
வீறு கூறி அறவு மிகுத்து எழும்
ஐம்புலன் தியங்கி விழத் திமிர்ந்தன

அனல் எழு துவசம், உடுகுலம் உதிர, வியோமமும்
ஏழு பாரும் அசலமும் மிக்க
பிலங்களும் குலுங்க அலித்து அதிர்ந்தன

அடல் நெடு நிருதர் தளம் அது மடிய, வலாரி தன்
வான் அள, அரசு கொடுத்து
அபயம் புகுந்த அண்டர் ஊரைப் புரந்தன

அடவியில் விளவு, தளவு அலர், துளவு, குராமகிழ்
கோடல் பாடல் அளி முரல் செச்சை
அலங்கல் செங்கடம்பு நேசித்து அணிந்தன

அனைத்து செயல்களும், என்னுடைய முயற்சியால் நிறைவேறினவே அல்லாமல், (இலை என) வேறொருவர் உதவியால் அல்ல என்று பெருமிதம் பேசி, நான் என்னும் அகங்கார வீறுப்பு - இறுமாப்பு பேசி, முற்றும் மேலோங்கி எழுகின்ற - துள்ளுகின்ற பஞ்சேந்திரியங்கள் (தியங்கி விழ) சோர்ந்து ஒடுங்கும்படி, அவற்றின் மேலே விழுந்து அடிப்பன (வாகைப் புயங்களே)

பெரும் சினத்துடன் தோன்றின (துவசம்) கொடியாம் கோழி, (உடுகுலம் உதிர) நக்ஷத்திர கூட்டங்கள் சிதறுண்டு விழ (வியோமமும்) ஆகாயமும், ஏழு உலகங்களும், மலைகளும் - எண் கிரிகளும் (மிக்க) சிறந்த (பிலங்களும்) பாதாள லோகங்களும் குலுங்க (அலித்து) ஒலிப்பதால் அதிர்ந்தன. (இப்படிப்பட்ட சேவல் கொடியை ஏந்தி இருப்பன (முருகனின் வாகைப்புயங்களே.

வலிமை வாய்ந்த பெரிய அசுரர் சேனைகள் இறந்து ஒழிய, இந்திரன் தன்னுடைய வானுலகை ஆளும்படி அவனுக்கு அரசாட்சியைக் கொடுத்து, தம்மிடம் அடைக்கலம் புகுந்த தேவர்களின் பொன்னுலகைப் (புரந்தன) காப்பாற்றின (வாகைப் புயங்களே)

காட்டில் வளர்கின்ற (விளவு) விளா இலை - வில்வ இலை, (தளவலர்) முல்லை மலர், (துளவு) துளசி, குராமலர், மகிழம்பூ (கோடல்) வெண் காந்தள், (பாடல்) பாடலம் - பாதிரிப்பூ, (அளி முரல்) வண்டுகள் ஒலிக்கின்ற (செச்சை அலங்கல்) வெட்சி மாலை, செங்கடம்பு ஆகிய மலர் மாலைகளை விரும்பி அணிந்தன (வாகைப் புயங்களே)

அரியதொர் தமிழ் கொடு உரிமையொடு அடி தொழுதே, கவி
மாலையாக அடிமை தொடுத்திடு
புன் சொல் ஒன்று, நிந்தியாமற் புனைந்தன.

அழகிய குமரன், உமை திரு மதலை, பகீரதி
மாதர் வாழும் அறுவர் ப்ரியப்பட
கந்தன் எந்தை இந்த்ர நீலச் சிலம்பினன்

அருபவன், அநகன், அனனியன், அமலன், அமோகன்
அநேகன், ஏகன் அபினவன், நித்தியன்,
அஞ்சல் என் ப்ரசண்ட வாகைப் புயங்களே

அருமையான ஒப்பற்ற தமிழால், வழியடிமை என்னும் உரிமையுடன், திருவடியைத் தியானித்து வணங்கியே, கவி (பாடல்) மாலையாக, அடிமையாகிய நான் புனைந்து சூட்டுகின்ற அற்பச் சொல்லை, (ஒன்றும்) கொஞ்சமேனும், இகழாமல் அணிந்து கொண்டன (வாகைப் புயங்களே)

அழகு நிறைந்த குமாரக் கடவுள், உமா தேவியின் செல்வப் புதல்வன், கங்கை, அழகுடன் விளங்கி வாழும் கார்த்திகை மாதர் அறுவரும் பிரியப்படுகின்ற கந்தசுவாமி, என் தந்தை, இந்திர நீல மலர் மலரும் (சிலம்பினன்) மலையாம் திருத்தணிகையில் வீற்றிருப்பவன்

ஆன்மாக்களுக்கு இன்ப துன்பங்களை நுகர்விப்பவன், பாபம் அற்றவன், (அனனியன்) ஜீவாத்மாவை விட்டு வேறுபடாத பரமாத்மா (அல்லது) வேறொருவர்க்கு உரிமையாகாதவன், (அமலன்) மலம் நீங்கிய தூயவன், (அமோகன்) மோகம் இல்லாதவன் — இச்சை அற்றவன். (அநேகன்) பல பொருளாகக் காட்சி தருபவன், (ஏகன்) ஒரே நித்தியப் பொருளானவன். (அபினவன்) என்றும் புதியவன், சாசுவதமாக இருப்பவன், (ஆகிய முருகப் பெருமான்) பயப்பட வேண்டாம் என்று காட்டும் வலிமை வாய்ந்த வெற்றி தங்கும் (பன்னிரு) திருக்கரங்களே.

(9) கடைக்கணியல் வகுப்பு

முருகப் பெருமானின் கடைக்கண் நோக்கின் பெருமை விளக்குவது

அலை கடல் வளைந்து (உ)டுத்த எழுபுவி, புரந்திருக்கும்.
அரசென நிரந்தரிக்க வாழலாம்
அளகை அரசன் தனக்கும், அமரர் அரசன் தனக்கும்,
அரசென அறம் செலுத்தி ஆளலாம்

அடை பெறுவது என்று முத்தி, அதி மதுர செந்தமிழ்க்கும்,
அருள் பெற நினைந்து, சித்தி ஆகலாம்

அதிர வரும் என்று முட்ட, அலகில் வினை சண்டை நிற்க,
அடல் எதிர் புரிந்து வெற்றி ஆகலாம்

(அடல் எதிர் புரிந்து வெற்றி ஆகலாம்)
இலகிய நலம் செய் புட்பகமும், உடல் நிறம் வெளுத்த
இப அரசு எனும் பொருப்பும் ஏறலாம்

இருவரவர் நின்றிடத்தும், எவர் எவர் இருந்திடத்தும்
ஒருவன் இவன் என்று (உ)ணர்ச்சி கூடலாம்

கடைக்கணியல் வகுப்பு

அலை வீசும் கடல் சூழ்ந்து ஆடை உடுத்தது போல் அமைந்துள்ள ஏழு உலகங்களையும் காத்து ரக்ஷிக்கின்ற சக்ரவர்த்தி என்று யாவரும் புகழ, நிரந்தரமாக நீங்கள் வாழ முடியும்

அளகாபுரிக்கு அரசனான குபேரனுக்கும், தேவர்களுக்கு அரசனான இந்திரனுக்கும், நீயே அரசன் என்னும்படி தரும வழியிற் செங்கோல் நடத்தி (நீங்கள்) ஆள முடியும்

அடையப் பெற வேண்டியது முத்தி என்றுணர்ந்து, மிக்க இனிமையான செந்தமிழ் அறிவு கிடைப்பதற்கும், முருகன் திருவருளையே நாடிப் பெறுதற்கு (நினைந்து) கருத்துக் கொண்டு நினைக்க (சித்தி ஆகலாம்) எண்ணிய எண்ணம் கை கூடப் பெறலாம்

அச்சத்தால் மனநடுக்கம் கொள்ள வரும் என்று கூறும்படி (முட்ட) தாக்க வருகின்ற (அலகில்) அளவற்ற கணக்கற்ற, (வினை) வஞ்சகம் தந்திரம் கூடிய (சண்டை) போர்கள், (நிற்க) வந்து எதிர் நின்றாலும், (எதிர் அடல் புரிந்து) அப்போர்களை எதிர்த்து போர் செய்து ஜெயம் அடையலாம்.

விளங்கும், இன்பத்தைத் தருகின்ற, குபேரனது புஷ்பக விமானத்திலும், (நிறம் வெளுத்த) வெண்ணிறம் உள்ள, கஜராஜனும் ஐராவதம் எனப்படும் மலை போன்ற வாகனத்திலும் ஏறலாம்

இரண்டே பேர்கள் நிற்கும் இடமாயினும், யார் யாரோ (பலர்) இருக்கும் இடமாயினும், இதோ இங்கு இருப்பவன் ஒப்புற்ற ஞானி என்று பார்ப்பவர்கள் சொல்லி வியக்கும்படியான ஞான தேஜஸை-அறிவை-அடையலாம்

எமபடர் தொடர்ந்து அழைக்கில் அவருடன் எதிர்ந்து, உள் உட்க,
இடி என முழங்கி வெற்றி பேசலாம்

இவை ஒழியவும். பலிப்பது அகல விடும், உங்கள் வித்தை
[illegible] இனி விடும் வெருத்த பாருளீர்

முலை இடை கிடந்து இளைப்ப, மொகு மொகு என வண்டு இரைப்ப
முகை அவிழ் கடம்பு அடுத்த தாரினன்

முதலி பெரிய அம்பலத்துள், வரை அசல மண்டபத்துள்
முநிவர் தொழ அன்று நிர்த்தம் ஆடினன்

முனை தொறு முழங்கி ஒற்றி, முகில் என இரங்க எற்றி
முறை நெறி பறந்து விட்ட கோழியான

(38)

எமனின் தூதுவர்கள், என்னைப் பின் தொடர்ந்து "(எமபுரத்துக்கு) வா" என்று கூப்பிட்டால், அவர்களை எதிர்த்து, (உள்) அவர்களுடைய நெஞ்சம் (உட்க) திடுக்கிட்டுப் பயப்படும்படி, இடி முழக்கம் போன்ற குரலுடன் முழங்கி, அவர்கள் பயந்து ஓடும்படியான வெற்றி மொழிகளைப் பேச முடியும்.

மேற்சொன்ன பேறுகள் மாத்திரம் அல்ல; பின்னும் (பலிப்பது) உலகில் தோன்றி முளைப்பது - பிறப்பது - பிறவி என்பது - (அகல விடும்) நீக்கி விடும் (பிறப்பு ஒழியும்); உங்களுடைய உலக வித்தைகளை - உலக கலைகளை, இனி விட்டு விடுங்கள் - பரந்துள்ள இப்பூமியில் பிறந்துள்ளவர்களே.

((முருகவேளின் மார்பில் உள்ள கடப்ப மலர் மாலையானது, அவர் வள்ளி)யைத் தழுவுவதால்) முலை இடை - வள்ளி பிராட்டியின் கொங்கையிடத்தே கிடந்து (இளைப்ப) கசங்க, அதனால் அந்த மாலையில் இருந்த வண்டுகள் மொகு மொகு என்று ஒலி செய்து ஓடும்படி, (முகை அவிழ்) மொட்டுக்கள் மலர்கின்ற கடப்ப மலர்கள் அமைந்துள்ள (தாரினன்) மாலையை உடையவனும்

(முதலி) முழு முதற் பொருளாம் நடராஜப் பெருமானது திருக்கூத்தாடும் பெரிய திரு அம்பலத்துள் (நடன சபையில்), (வரை அசல) பெரிய மலை போன்ற சபா மண்டபத்தில், பதஞ்சலி. வியாக்ரபாதர் ஆகிய முனிவர்கள் தொழுது வணங்க அன்று நடனம் ஆடினவனும்

போர் முனை தொறும் ஒலி செய்து (ஒற்றி) தாக்கி, மேக கர்ச்சனை - இடி - போல பேரொலி எழ மோதி, போர் முறை வழியே பறந்து செய்த கோழியைக் கொடியாகக் கொண்டவனும்

குதிய (அ)வுணர் அன்று பட்ட, குதிய குடர் நன்று சுற்று
புது கழுகு புந்தர் இட்ட வேலினன்

(முது கழுகு புந்தர் இட்ட வேலினன்)

மலை மருவு பைம்புனத்தி, வளரும் இரு குன்றம் ஒத்த
வலி குடி புகுந்திருக்கு மார்பினன்

மழலைகள் விளம்பி மொய்த்த அறுவர் முலை உண்டு முற்றும்
வடிவுடன் வளர்ந்திருக்கும் வாழ்வினன்

மலை இறை மடந்தை பெற்ற ஒரு மதலை என்று உதித்து,
மலை இடியவும் துணித்த தோளினன்

மயிலையும், அவன் திருக்கை அயிலையும், அவன் கடைக்கண்
இயலையும் நினைந்திருக்க வாருமே.

(கொடுமை) முற்றின அசுரர்களின், போர் புரிந்த அந்த நாளில், (பட்ட) கிழியுண்டு வெளி வந்த (குதிய) முற்றின குடல்களை, (வேலாயுதமானது தனது சிரமாலையாக அக்குடல்களை) நன்றாகச் சுற்றியுள்ள காரணத்தால் - (அந்தக் குடல் மாமிசத்தை உண்ண விரும்பி) வயது சென்ற கழுகுகள், பந்தல் போட்டது போலக் கூட்டமாகப் பறந்து வந்து மேலே சூழும், வேலாயுதத்தை உடையவனும்,

வள்ளி மலையில் இருந்து, பசிய தினைப்புனத்தைக் காத்திருந்த வள்ளி நாயகியின், பெருத்து மேலெழும் இரண்டு மலை போன்ற தனங்கள் தாக்கினதால் வலி. சதா இடம் பெற்றிருக்கும் திரு மார்பை உடையவனும்

மழலைச் சொற்களைப் பேசி, தன்னைச் சூழ்ந்து நின்ற, கார்த்திகை மாதர் அறுவர்களின் கொங்கைப் பாலைப் பருகி, அங்கங்கள் யாவும் அழகுற விளங்க வளர்ந்திருக்கின்ற வாழ்வை உடையவனும்

மலைகளுக்கு அரசனான இமய மலையின் மகள் பார்வதி பெற்ற, ஒப்புற்ற குழந்தை எனத் தோன்றியிருந்தும், ஒரு மலையையே பொடிபடப் பிளந்து தள்ளின தோள் வீரம் கொண்டவனும் (ஆன முருகவேளின்)

மயிலையும், அவனது திருக்கரத்தில் உள்ள வேலாயுதத்தையும் அவனது கடைக்கண்ணின், கருணை. பெருமை ஆகிய தன்மைகளையும் தியானித்திருக்க வருவீர்களாக.

பைரவி

மயில் வகுப்பு

ஆதவனும் அம்புலியும் அசுஉற விழுங்கி உமிழ்
ஆலமருவும் பணி) இரண்டும் அழுதே

அறுமுகன், ஐந்து முகன், ஆனைமுகன் எம் கடவுளாம்
என மொழிந்து அகல வென்று விடுமே

ஆர்கலி கடைந்து அமுது வானவர் அருந்த அருள்
ஆதி பகவன் துயில் அநந்தன் மணிசேர்

ஆயிரம் இருந் தலைகளாய் விரி பணம் குருதியாக
முழுதும் குலைய வந்து அறையுமே

நட பைரவி

வேத முழுதும் புகல் இராமன் அரு தம்பி மிசை
வீடணன் அருந் தமையன் மைந்தன் இகலாய்

வீசும் அரவம் சிதறி ஓட, வரு, வெம் கலுழன் மேல்
இடி எனும்படி முழங்கி விழுமே

மயில் வகுப்பு

(40)

சூரியனையும், சந்திரனையும், துன்பம் உறும்படி விழுங்கி (கவர்ந்து) பின்பு வெளிவிடுகின்ற, விஷம் பொருந்திய, ராகு கேது என்னும் பாம்புகள் இரண்டும் (பயந்து) அழுது

ஆறுமுகப் பமரன், ஐம்முகச் சிவன், யானைமுகக் கணபதியும் தான் நாங்கள் இருவரும் வணங்கும் தெய்வங்களாம் என்று மயிலிடம் சொல்லி (அங்ஙனமாயின் உங்களை விட்டு விடுகிறேன் என்று மயில் அந்தப் பாம்புகள் இரண்டையும்) (அகல) பிழைத்தோம் என அகன்று போம்படி (வென்று) அப்பாம்புகளை ஜெயித்து (விடுமே) அவைகளைப் போகட்டும் என்று விட்டு விடும் (செந்திற் குமரனது மயில்)

கடலைக் கடைந்து அமுதத்தை தேவர்கள் உண்ணும்படி அருளின ஆதிமூர்த்தியாம் திருமால் படுத்துத் தூங்கும் ஆதிசேடனுடைய ரத்ன மணிகள் உள்ள

ஆயிரம் பெரிய முடிகளாய் விரிந்துள்ள படங்கள் ரத்தப்ரவாகம் எடுக்க, உடல் முழுதும் (குலைய) நடுங்கும்படி வந்து (அறையும்) ஓங்கி அடிக்கும் (செந்திற் குமரனது மயில்)

வேதங்கள் யாவற்றையும் சொன்ன, இராமனுடைய ஒப்பற்ற தம்பியாகிய லக்ஷ்மணன் மீது, விபீஷணருடைய அருமை வாய்ந்த தமையனும் ராவணனுடைய பிள்ளையாகிய இந்திரஜித் பகைமை பூண்டு,
எறிந்த நாகபாசம் என்னும் படை, அஞ்சி விழுந்து ஓடும்படி வந்த, கடுமை வாய்ந்த கருடன் மீது, இடி விழுந்தது போல ஒலி செய்து மோதும் (செந்திற் குமரனது மயில்)

மேதினி சுமந்த பெரு மாசுணம் மயங்க, நக
மேவு சரணங்கொடு (உ)லகெங்கும் உழுமே

வேலியென எண் திசையில் வாழும் உரகம் தளரவே
அழல் எனும் சினமுடன் படருமே.

<u>அனந்த பைரவி</u>
போதினில் இருந்த கலைமாதினை மணந்த உயர்
போதனை இரந்து மலர் கொண்டு முறையே
பூஜனை புரிந்து கொடியாகி மகிழ் ஊன்று. துகிர்
போல் முடி விளங்க வரும் அஞ்சம் அடுமே

பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
பூரண கணங்களொடு சூழ்ந்து தொழவே
போர் இடுப, வென்று, வெகு வாரண கணங்கள் உயிர்
போயினம் எனும்படி எதிர்ந்து விழுமே

<u>ஸிந்து பைரவி</u>
கோது அகலும் ஐந்து மலர் வாளி மதனன் பொருவில்
கோல உடலம் கருகி வெந்து விழவே
கோபமொடு கண்ட விழி நாதர் அணியும் பணிகள்
கூடி மனம் அச்சி வளை சென்று புகவே

உலகைச் சுமந்து தாங்குகின்ற பெரிய ஆதிசேடன் என்னும் பாம்பு
மயக்கம் கொள்ளும்படி, நகங்கள் உள்ள பாதங்களால். உலக
முழுமையும் நிலத்தை கிண்டும் (செந்திற் குமரனது மயில்)
வேலி இட்டது போல எட்டுத் திசைகளிலும் வாழ்கின்ற அஷ்ட
நாகங்கள் அச்சி ஒடுங்கி மெலிய, நெருப்புப் போன்ற கோபத்
துடன் செல்லும்- பவனி வரும் (செந்திற் குமரனது மயில்)

வெண் தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதியை மணந்த மேன்மை
மிக்க பிரமனை இரந்து வேண்டி, மலர் கொண்டு முறைப்படி
பூஜை செய்து, (அந்தப் பிரமனுக்குக்) கொடியாகி நின்று, மகிழ்ச்சி
(ஊன்று) பொருந்திய, (துகிர்) பவளம் போன்ற நல் உச்சி விளங்க
வருகின்ற அன்னப்பறவையை வருத்தி வெல்லும் (- - - - மயில்)
பூதர்கள் கந்தர்வர்கள், நவநாதர்களாம் சித்தர் ஒன்பதின்மர், கிம்புருடர்
ஆகிய இவர்கள், சகல பதினெண் கணங்களுடன் சூழ்ந்து வணங்கி நிற்க
இடுகின்ற போர்களையெல்லாம் வென்று, பல யானைக் கூட்டங்களும்
உயிரையே இழந்தோம் என்று சொல்லும்படி, அவைகளின்
மேலே தாக்கி விழும் (செந்திற் குமரனது மயில்)

நெறி தவறுதல் இல்லாத ஐந்து மலர்ப் பாணங்களைக் கொண்ட மன்மத
னுடைய, நிகரில்லாத அழகிய உடம்பு கருகி வெந்து விழும்படி
கோபத்துடன் பார்த்த நெற்றிக் கண் கொண்ட சிவபெருமான்
அணிந்துள்ள பாம்புகள் ஒன்று கூடி, உள்ளம் நடுங்கி வளைக
ளுட் சென்று புகும்படி

கூவி. இரவு அந்தம் உணர் வாழி என நின்று பொரு
கோழியொடு வென்றி முறையும் பகருமே (42)

கோலம் உறு செந்தில் நகர் மேவு குமரன் சரண
கோகனதம் அன்பொடு வணங்கு மயிலே

கூச்சலிட்டு, இராப் பொழுது முடிவதை- சூரியன் எழுவதை- (42)
உணர்த்தும் (நண்ப) நீ வாழ்வாயாக என்று கூறி நின்று. (பொரு)
தன்னொடு பொருந்தி நிற்கும் கோழியுடன், தான் (பொருது) வெற்றி
யடைந்த போர் முறைகளையும் விளங்கக் கூறும்
அழகுள்ள திருச்செந்திற் பதியில் (மேவு) வீற்றிருக்கும் குமரக்
கடவுளது திருவடித் தாமரையை அன்புடனே வணங்கி
நிற்கும் மயிலே.

(11) பீம்பளாஸ் **வீரவாள் வகுப்பு** ரூ) (1+½)

(வீரவாகுத் தேவரின் வாட்படையின் சக்தியைக் கூறுவது)

பூவுளோனுக்கும் உயர் தேவர் கோனுக்கும் எழு
பூவில் யாவர்க்கும் வரு துன்பு தீர்த்திடுமே
பூத சேனைக்குள் ஒரு கோடி சூர்யப் பிரபை
போல மாயக் கரிய கங்குல் நீக்கிடுமே

பூதி பூசிப் பரமர், தோலை மேல் இட்டதொரு
போர்வை போல், நெட்டுறை மருங்கு சேர்த்திடுமே

போரிலே நிர்த்தம் இடு வீர மா லக்ஷ்மி மகிழ்
பூசை நேசித்து மலர் தும்பை சாத்திடுமே
பாவமேக் கொடிய சூரனார் பெற்ற பல
பாலர் மானத் தசைகள் உண்டு தேக்கிடுமே

வீரவாள் வகுப்பு

தாமரைப் பூவில் வாசம் செய்யும் பிரமனுக்கும், உயர் பதவியிலுள்ள
தேவராஜனாகிய இந்திரனுக்கும், ஏழுலகத்தில் உள்ள யாவர்க்கும்
வந்த கஷ்டத்தை நீக்கும் (வீரவாகுத்தேவரின் வாள்)
பூதகண சேனைகளுக்குள், ஒரு கோடிக் கணக்கான சூரிய ஒளி போன்று
விளங்கி (மாய) அஞ்ஞானம் என்கின்ற கரிய இருள் விலக்கும்
(வீரவாகுத்தேவர் வென்ற வாட்படையே)
விபூதி பூசியுள்ளவரான சிவபெருமான் (யானைத்) தோலை மேலே போர்த்
துள்ளதான போர்வை போன்றதான (கரு நிறத்ததான) நெட்டுறை-
பெரிய உறையின் (மருங்கு) உள் புறத்தே சேர்ந்து விளங்கும் (....)
யுத்தகளத்திலே நடனமிடுகின்ற மகா வீர லக்ஷ்மி மகிழும்படி செய்யப்
படும் பூஜையை விரும்பி தும்பை மலரைச் சூடிக் கொள்ளும் (....)
பாவமே ஒரு எடுத்தாற் போன்ற, கொடிய, சூரபத்மன் பெற்ற
பல பிள்ளைகள் (மாள) இறந்து போம்படி, அவர்தம் மாமிசங்களை
உண்டு தெவிட்டும்படி ஏப்பம் இடும் (வீரவாகுத்தேவர் வென்ற வாட்படையே)

பாதுகோயப் பகைஞன் மேனி சோரக் குருதி
பாயவே, வெட்டி இரு துண்டமாக்கிடுமே

பாரு சேர் யுத்தகள மீதிலே, சுற்று நரி,
பாறு, பேய் துய்த்திட நிணங்கள் ஊட்டிடுமே

பாடி ஆடிப் பொருத போரிலே புத்திர
கபாலி சூலப்படையை வென்று தாக்கிடுமே

ஆவலாகத் துதி செய் பாவலோர் மெய்க்கவிகளாம்
அகோரக் களை களைந்து நீக்கிடுமே
யாருமே அற்றவன், என் மீது ஒர் ஆபத்து உற
வராமலே சுற்றிலும் இருந்து காத்திடுமே
ஆடல் வேள் நற்படைகள், ஆணை யாவுக்கு முதல்
ஆணையா வைத்து வலம் வந்து போற்றிடுமே.
ஆலகாலத்தை நிகர் கால சூலத்தையும்
அருத பாசத்தையும் அரிந்து போட்டிடுமே.

மேவலார் முப்புரமும் நீறவே சுட்ட ஒரு
மேருவாம் விற்பரமர் தந்த பாக்கியவான்

(43)

பாதுகோயனும் பகைவனுடைய உடலினின்றும், குருதி (ரத்தம்) (சோரப் பாய) சொரிந்து பெருகிப் பாயும்படி, அவனை வெட்டி இரண்டு துண்டங்களாக்கிடும் (வீரவாகுத்தேவர்.... வாட்படையே)

பட்டு அழிதல் உண்டாகும் போர்க்களத்திலே, (உணவுக்குச்) சுற்றி வரும் நரி, பருந்து, பேய்க் கூட்டம் இவை உண்ண, மாமிசத்தை உண்ண அளிக்கும். (வீரவாகுத் தேவர் வென்ற வாட்படையே)

வீரப்பாடல்களைப் பாடிக் கொண்டும், வீர விளையாட்டுகளை ஆடிக் கொண்டும் போரிட்ட யுத்தத்தில், புத்திரகாளியினுடைய சூலாயுதத்தை மோதி வெற்றி காணும் (வீரவாகு... வாட்படையே)

ஆசையுடன் துதிக்கின்ற கவிவாணர்களுடைய, உண்மையான வறுமையாம், உக்கிரமான (களை) களைப்பு - சோர்வை போம்படி நீக்கும்

யாருமே துணையில்லாதவனை என்மேல், ஒரு ஆபத்துக் கூட தொடர்ந்து வராதபடி, என்னைச் சுற்றிலும் இருந்து காத்து உதவும்

வெற்றி விளங்கும் முருகவேளின் ஆயுதங்களை, ஆக்ஞை (கட்டளைகள்) எல்லாவற்றிற்கும், முதலிற் போற்ற வேண்டிய கட்டளையாகப் பாவித்து, வலம் வந்து, அந்த ஆயுதங்களைப் போற்றும்

ஆலகால விஷத்தை ஒத்ததான, காலனது சூலாயுதத்தையும், (அருத) அவன் கையினின்றும் நீங்காத பாசக்கயிற்றையும் அறுத்துத் தள்ளிவிடும் (வீரவாகுத் தேவர் வென்ற வாட்படையே)

பகைவர்களது முப்புரமும் - திரிபுரங்களும், (நீறவே) பொடியாகும்படி சுட்டெரித்த ஒரு ஒப்பற்ற பரமர், மேரு என்கின்ற மலையை வில்லாகக் கொண்ட பரமர் - சிவபெருமான் - உலகுக்கு அளித்த புண்ணியமூர்த்தி)

வேடர் மானுக்கும் உயர் தேவயானைக்கும் இசை (44)
வேலர் தாளைத் தொழுது உயர்ந்த வாழ்க்கையினன்

வீறு சேர் மிக்க கணநாதனர் எட்டுவகை
வீரர் நேயத் தமையன் என்ற தோட் துணைவோன்

மேன்மையாம் லக்ஷ ரத வீரர் பூசிக்க வரு
வீர வாகுத் தலைவன் வென்ற வாட்படையே.

(44)
வேடர் வளர்த்த மான் போன்ற வள்ளி நாயகிக்கும், சிறந்த தேவசேனைக்கும் (இசை) மணவாளனை இசைந்த, வேற் பெருமான் முருகனின் திருவடிகளைப் பணிந்து, அதன் மூலம் மேம்பட்ட வாழ்க்கையை உடையவன்,

பெருமை வாய்ந்த, மேலான, நந்தி கணத்தவர்களான எண் வகையான வீரர்களின் அன்பு மிக்க தமையன் என்ற தோளொத்த சகாயன

சிறப்பு மிகுந்த, ரதங்களை உடைய லக்ஷ வீரர்கள், போற்றிப் பணிய (வரு) எழுந்தருளும், வீரவாகு என்னும் பெயர் கொண்ட நாயகன் - ஆகிய பெருமான் - (வென்ற) செய்த பல போர்களிலும் வெற்றி கொண்டதான (வாட் படையே) வாளாயுதமே.

(12) மத்யமாவதி — திருப்பழநி வகுப்பு — 14/4/40 கநடை

எந்த வினையும், பவமும், எந்த விடமும், படரும்
எந்த இகலும், பழியும், எந்த வழுவும், பிணியும்
எந்த இகழ்வும், கொடிய எந்த வசியும் சிறிதும்
அணுகாமலே

எந்த இரவும், தனிமை எந்த வழியும் புகுத,
எந்த இடமும், சபையில் எந்த முகமும், புகலும்
எந்த மொழியும், தமிழும், எந்த இசையும் பெருமை
சிதறுமலே

திருப்பழநி வகுப்பு

எவ்விதமான வினையும், பிறப்பினால் வரும் பாவமும். எவ்விதமான விஷமும், (படரும்) துன்பமும், எவ்விதமான (இகலும்) பகையும், பழியும், எவ்விதமான குற்றமும், நோயும், எவ்விதமான நிந்தையும், கொடிதான எந்த வசியப்ரயோகமும், சிறிதளவும் அணுகாமலும்

எந்த இரவிலும், தனியாக எந்த வழியிலும் புகவும் - செல்லவும், எந்த இடத்திலும், சபையிலே எந்த இடத்தும், பேசும் எந்த மொழியும், தமிழும், எந்த வகையான இசையைப் பாடுதலிலும், என்னுடைய கீர்த்தி சிதறுண்மையும் - கெடாமலும் (நான் இருக்க வேண்டி)

வந்தனை செய்து, உன் சரண நம்புதல் புரிந்த, அருள்
வந்து, அநுதினம் தனிலும் நெஞ்சில் நினைவின் படி
வரம் தர, உவந்து அருள், இதம் பெறுவதன்றி, நெடு
வலை வீசியே

வஞ்ச விழி சண்டன், உறுகின்ற பொழுதும், குமார
கந்தா என நன்கு அறையவும் தெளிவு தந்து, உயிர்
வருந்து பயமும், தனிமையுந் தவிர அஞ்சல் என
வரவேணுமே

தந்தனை தந்தனன டிண்டிகுடி டிண்டிகுடி
குண்டமட குண்டமட மண்ட மென நின்று
முரசம் திமிலை பம்பை துடி திண்டிமம் முழங்கும் ஒலி
திசை வீறவே

தண்ட அமர் மண்டு அசுரர் மண்டை நிணம் மென்று அவகை
உண்டு உமிழ்தல் கண்டு அமரர் இந்திரன் வணங்கு பத
தண்டை சிறு கிங்கிணி புலம்பிட வரும் பவனி
மயில் வாகன

(45)

உன்னை நான் வணங்கி, உன் திருவடியை நம்பினதால், உன் திருவருள் வரப் பெற்று, தினந்தோறும், உள்ளத்தில் நினைத்த நினைவின்படியே, வரத்தைத் தர, மனம் உவந்து நீ திருவருள் பாலிக்கும். நன்மை பெறுவதுடனும், பின்னும், ஒரு பெரிய பாசக் கயிறு என்னும் வலையை வீசி)

வஞ்சக எண்ணத்தைக் காட்டும் கண்களை உடைய யமன், என்னைப் பிடிக்க வருகின்ற போதும், 'குமர' 'கந்தா' என்று உன் திருநாமங்களை நன்கு சொல்வதற்கும் மனத் தெளிவை எனக்கு நீ கொடுத்து யமனைக் கண்டு நான் படும் அச்சத்தையும், தனியாய் அவன் கையிற் சிக்கிப் போகும் துணையற்ற நிலையும் (தவிர) நீங்கும்படி "நீ பயப்படாதே" என்று கூற வந்தருள வேண்டுகின்றேன்.

தந்தனை தந்தனன, டிண்டிகுடி டிண்டிகுடி. குண்டமட குண்டமட மண்டம் என்று ஒருங்கே நின்று முரசு, திமிலை, பம்பை, துடி, திண்டிமம் எனும் வாத்தியங்கள் (முழங்கும் ஒலி) சப்திக்கும் ஒலியானது திசைகளில் பெருகி மிக

(தண்டம்) படையாக வந்த போரில் (மண்டு) நெருங்கின அசுரர்களின் தலைப்பாகத்து (கொழுப்பு) இறைச்சியை, மென்று தின்ற (அவகை) பேய்கள் (இது வேண்டாம் என்று) உண்டதை உமிழ்தலைக் கண்ட தேவர்களும். இந்திரனும் வணங்குகின்ற (பத) திருவடிகளின் தண்டையும், சிறிய பாதகிங்கிணியும் (புலம்பிட) ஒலிக்க (பவனி வரும்) திருவுலா வருகின்ற மயில் வாகன மூர்த்தியே!

(46)

செந்தளிரை முந்து படம் என்று, உள மருண்டு, நிறை
சந்தன வனம் குலவு மந்தி, குதி கொண்டு, அயல்
செறிந்த கமுகின் புடை பதுங்கிட, வளைந்து நிமிர்
மடல் சாடவே

சிந்திய அரம்பை பலவின் கனியில் வந்து விழ
மென்கனி உடைந்த சுளை விண்ட நறை கொண்டு, சிறு
செண்பக வனங்கள் வளர் தென் பழநி அம் பதியின்
முருகேசனே.

(46)

முளைக்கும் பருவத்துச் (சந்தன மரத்தின்) மெல்லிய இலையை, (மூந்து) எதிர்த்து வரும் பாம்பின் படம் என்று. உள்ளம் பயந்து அடர்ந்த சந்தனக் காட்டில் (குலவு) உலவும் குரங்கு, குதி குதித்து ஓடி. (அயல்) பக்கத்தில் நெருங்கி இருந்த (கமுகின்) பாக்கு மரத்தின் நடுவில் போய் ஒளிந்து கொள்ள (அந்த மந்தி குதித்ததால்) தாழ்ந்து நிமிர்ந்த (அந்த கமுக மரத்தின்), மடல்- கிளை தாக்கினதால்- மோதினதால்

சிதறி விழுந்த (அரம்பை) வாழையானது. பலாப் பழத்தின் மேல் வந்து விழ (அதன்) மெதுவான- மென்மையான பழம் உடைபட்ட சுளை (விண்ட) வெளியிட்ட (நறை கொண்டு) தேனைப் பருகி. சிறு செண்பக மல்லிகைக் காடுகள் வளர்கின்ற (தென்) அழகிய பழநிப் பதியில் வீற்றிருக்கும் முருகேசனே.